# கலைஞானசுரபி



இணுவில் கந்தசுவாமி கோவில்
இளந்தொண்டர் சபை பல்கலை மாணவன்
பரமேஸ்வரன் கௌரீசன் அவர்களின்

## மிருதங்க இசை அரங்கேற்ற மலர்

தொகுப்பு : மூ. சிவலிங்கம்

29-01-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கலா பூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும்
இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபையின்
பல்கலை மாணவனுமான

# செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் அவர்களின்
# மிருதங்க இசை அரங்கேற்றம்

**காலம் :** 29-01-2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி

**இடம் :** இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை கலையரங்கு

**தலைவர் :** கலாபூஷணம், சங்கீதபூஷணம் வி.சிவஞானசேகரம் (இசையாசிரியர், இளந்தொண்டர் சபை)


**பிரதம விருந்தினர் :** திரு.ப.விக்கினேஸ்வரன் (வடமாகாண கல்விப்பணிப்பாளர்)

**சிறப்பு விருந்தினர் :** செஞ்சொற்சொல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (அதிபர், தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் சபை)
பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் (கணிதத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர் :** திரு.அ.அகிலதாஸ் (அதிபர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)
திரு.இரா.அருட்செல்வம் (அதிபர், அருள் கல்வி நிலையம்)


## நிகழ்ச்சி நிரல்

☆ மங்கல விளக்கேற்றல்
☆ திருமுறை ஓதுதல் - அறநெறிப் பாடசாலை மாணவர்கள்
☆ வரவேற்புரை - இசைமாணி திரு.க.கஜன்
☆ ஆசியுரைகள்
☆ தலைமையுரை
☆ குருவணக்கம்
☆ இசையரங்கம்
☆ அரங்கிசைக்கலைஞர் கௌரவிப்பு
☆ வாழ்த்துரைகள்
☆ பிரதம விருந்தினர் உரை
☆ சிறப்பு விருந்தினர் உரை
☆ கௌரவ விருந்தினர் உரை
☆ மதிப்பீட்டுரை
☆ கலைஞர் கௌரவிப்பு
☆ நன்றியுரை - பரமேஸ்வரன் கோவேழன்



## அரங்கிசைக்கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| பாட்டு | - | இசைமாணி தவநாதன் றொபேட் |
| மிருதங்கம் | - | செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் |
| வயலின் | - | இசைஞான திலகம் உ.இராதாகிருஸ்ணன் |
| கடம் | - | கலைமாணி நா.சிவசுந்தரசர்மா |
| கெஞ்சிரா | - | இசைமாணி வி.இராகவன் |
| முகர்சிங் | - | கலாவித்தகர் சி.செந்தூரன் |
| தம்புரா | - | இசைமாணி க.றஜீவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கலைஞானசுரபி

இணுவில் இளந்தொண்டர்சபை

பல்கலை மாணவன்

செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் அவர்களின்

**மிருதங்க இசை அரங்கேற்ற மலர்**

தொகுப்பு : மூ.சிவலிங்கம்

**29-01-2012**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம் துணை



# ஆசியுரை

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

திருக்கோவில்களினாலும், கல்விமான்களினாலும், கலைஞர்களினாலும் பெருமை சேர்ந்த இவ் வரலாற்றுப் பதியாகிய இணுவில் இவ்வுலகம் அறிந்த இனிய திருவூர் ஆகும். இவ்வாறு மிகத் தொன்மையான வரலாறு கொண்ட இத்திருவூர் மற்றைய ஊர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் பதி ஆகும். இப்பதியில் வளரும் ஆத்மீகமும், அறிவியலும், கவினுறு கலைகளும் எம் மண்ணுக்கு பெருமை சேர்க்கின்றன.

இச்சிறப்பான பதியில் நடுநாயகராக அருளாட்சி செய்து வரும் முருகப் பெருமான் சந்நிதியில் ஆத்மீகம், சைவப்பணி, கலை, கல்வி, கலாசாரம், பாரம்பரியம் போன்ற வித்தைகளை சமய நிறுவனமாக தொண்டாற்றுகின்றது இளந்தொண்டர் சபை ஆகும்.

இந்து சமயத்தின் பாரம்பரியமான இசைக்கலைகளில் மிருதங்கக்கலை மிகவும் பெருமையுடையது. இவ்வாத்தியம் நந்தியெம்பெருமானால் எம் பெருமானுக்கு வாசிக்கும் உயர்ந்த நிலை பெற்றது. இந்தக்கலை அதில் ஈடுபடும் கலைஞனை ஒரு நெறியான வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றது.

உயர்வான இக்கலைகளை வளர்க்கும் இளந்தொண்டர்சபையின் மாணவன் ப.கௌரீசன் நல்லதொரு பாரம்பரியமான குடும்பத்தில் பிறந்து நல்லதோர் குருவைப் பெற்று இன்று மிருதங்கக் கலையை அரங்கேற்றம் செய்கின்றார். அரங்கேறும் கௌரீசன் நிறைவான கல்வியும், ஆயகலைகளும், உயர் பண்புகளும், பெருஞ் செல்வமும் நிறையப் பெற்று சைவ சமயத்திற்கும், தமிழுக்கும், கலைகளுக்கும் பெருந்தொண்டாற்றி நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம். இவரையும், இவரது குரு, இவரது பெற்றோர், அரங்கேற்ற ஏனைய கலைஞர்களையும் வாழ்த்தி இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்

அதிபர்,

"சிவாகமஞான பாஸ்கரன்"

*சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.*



T.MAHADEVAKURUKKAL,
DHARMASASTA GURUKULAM,
INUVIL, CHUNNAKAM.
T.P : 021 222 2660.



ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி தேவ்யாலயம்,
இணுவில்,
சுன்னாகம்.

திகதி :-.....................................

இணுவில் கந்தசுவாமி கோவிலின் வட திசையில் அமைந்திருக்கும் இளந்தொண்டர் சபை சாதனைகள் பல புரிந்திருக்கிறது. பிரதானமாக பண்ணிசை சங்கீத வகுப்புகள் அங்கே தகுதியான ஆசிரியர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன.

மிருதங்க வித்துவான் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள் நெடுங்காலமாக அங்கே மிருதங்க இசையைக் கற்பித்து வருகிறார். அவருடைய மாணவர்கள் பலர் அரங்கேறி அவர்தம் பெருமையைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். தற்போது 13 வயது நிரம்பிய ஒரு இளம் கலைஞனை மிருதங்க வித்துவானாக ஆக்கிய பெருமை அவரைச் சேர்கிறது. பரமேஸ்வரன் கௌரீசன் மிருதங்கம் வாசிப்பதில் பற்றுக்கொண்டவராகத் திகழ்வதை அவர் தம் பெற்றோர் கண்டு கொண்டு அவரின் கலைத்திறமை புலப்பட வழிகோலியிருக்கிறார்கள். இவ்விளம் கலைஞனின் மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற நடைபெற முருகப்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.


**சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இணுவில் கந்தசுவாமி கோவில்
# பிரதமகுருக்கள் சிவஸ்ரீ.உ.அபராஜிதக்குருக்களின்
# ஆசியுரை




முத்தமிழும் சிவநெறியும் முறையே சிறந்தோங்கிட புகழ்வாய்ந்த கோவில்களும் ஞானிகளும் கற்றோர்களும், கலைஞர்களும் சிறந்திட பல வளங்கள் சார்ந்த பழம்பதி இணுவையம்பதியாகும். இப்பதியே இயல், இசை, நாடகத்திற்குப் புகழ் பெற்றது என்று போற்றப்படுகிறது. இங்கு கலைகளை வளர்க்க எனப் பல பெரியோரும், தொண்டு நிறுவனமான இளந்தொண்டர் சபையும் இயங்கி வருகின்றது எனலாம்.

மனித வரலாற்றில் கலைகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவை மக்கள் வாழ்வினை வளம்படுத்தியும், செம்மைப்படுத்தியும் வந்துள்ளன. உறங்கிக்கொண்டிருக்கும் மனித உள்ளங்களைத் தட்டி எழுப்பக்கூடிய ஒரு உலகப் பொதுமொழி கலையாகும். அவ்வாறான தெய்வீகக் கலை வடிவங்களில் மிருதங்கக் கலை தனித்துவம் மிக்கது. நந்தியெம்பெருமானின் கரங்களால் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்ட உன்னத கலைவடிவம் மிருதங்கம். அக்கலையில் அரங்கேற்றம் பெறும் பரமேஸ்வரன் கௌரீசன் கலைகளில் மிகவும் ஆர்வம் மிக்கவர். நமது ஈழத்திருநாட்டில் மிருதங்கக் கலையானது செம்மையான முறையில் வளர்ச்சி அடைவதற்குக் காரணமாக இருக்கின்றவர்களில் முக்கியமானவர் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள். அவர்களிடம் முறையாக மிருதங்கம் கற்று இன்று மேடையில் அரங்கேறும் திறமையுடன் வளர்ந்துள்ளார் ப.கௌரீசன். அவர் மிருதங்கக் கலை மட்டுமல்ல நாடகம், கதாப்பிரசங்கம், பண்ணிசை போன்ற துறைகளிலும் மிகவும் திறமை மிக்கவர். இவர் மேன்மேலும் கல்வியிலும் கலைகளிலும் வளர என் இனிய ஆசிகள் உரித்தாகுக.

சுபம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்




"மந்திர கிரியா சுரபி"

**சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள்**

பிரதமகுரு ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் - தாவடி

உற்சவகுரு காரைக்கால் சிவன் கோவில் - இணுவில்

விசேஷ குரு ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில் - மருதனார்மடம்

"பவா நிவாசம்",
காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்,
இலங்கை.
0094 21 224 1781.


திகதி 23-01-2012



# ஆசியுரை

கலை என்றால் எது வளருகிறதோ அது கலை. இணுவை மண் பல கலைஞர்களை வளர்த்தெடுத்த மண். அந்த வகையிலே இன்றைய தினம் தன் இளம் மைந்தன் ஒருவனுடைய கலையை அரங்கேற்றிப் பெருமைப்பட்டுக் கொள்கிறது.

உலக இயக்கமே நாத்திலிருந்துதான் பிறந்தது. ஆடவல்லானின் கரத்திலிருக்கும் உடுக்கையிலிருந்தே அந்த நாத ஒலி எழுப்பி உலகை இயக்கியது. அதிர்வு உண்டானால் தானே சப்தம் ஏற்படுகிறது. சப்தம் ஏற்பட வேண்டுமானால் அதிர்வு உண்டாக வேண்டுமல்லவா. திருநடனம் புரிகின்ற நடராஜப் பெருமானின் நிருத்தம் முடிகின்ற சமயத்தில் டமருகத்தில் சாப்பு கிடு கிடுவென்று 14 சப்தங்களாக உதிர்ந்தது.

நிருந்தாவஸானே நடராஜ ராஜோ நநாத
டக்காம் நவபஞ்ச வாரம்
உத்தர்துகாம : ஸனகாதி ஸித்தான் ஏதத்
விமர்சே சிவ சூத்ர ஜாலம்

நந்திகேச்வர காரிகா – 1.

சுலோகத்தில் சொல்லப்பட்ட "நவ பஞ்ச வாரம்" என்றால் நவ(9) + பஞ்ச(5) = பதின்நான்கு (14) அந்த சப்தங்களை "மாஹேஸ்வர சூத்திரம்" என்று வைத்து அவைகளுக்கு நந்திகேஸ்வரர் "காரிகா" (காரிகை) என்ற பாஷ்யம் எழுதினார்.

நந்திகேஸ்வரர் என்றாலே எம்முன் அவர் மிருதங்கம் இசைக்கும் தோற்றமே தோன்றும். வாத்தியங்களில் முக்கியமானவை மூன்று வகை:–

1) சர்மவாத்தியம் :– மிருதங்கம், மேளம், டக்கா, கஞ்சிரா போன்ற தோல் வாத்தியங்கள்
2) தந்திரி வாத்தியம் :– வீணை, பிடில் போன்ற தந்தி வாத்தியங்கள்
3) வாயு ரந்திர வாத்தியம்:– புல்லாங்குழல், நாயனம் போன்ற துளை வாத்தியங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளில் தோல் வாத்தியங்கள் வாசித்து இறுதியில் சாப்பு கொடுப்பது வழக்கம். இந்தச் சாப்புப் பற்றியே மேற்கண்ட சுலோகம் கூறுகின்றது.

மிருதங்க வாத்தியத்தில் துறை தேர்ந்த புகழ்பூத்த கலைஞரான திருவாளர் க.ப.சின்னராசா அவர்களிடம் சிறு வயது முதலே மிருதங்கம் பயின்று இன்று அரங்கேற்றம் காணும் செல்வன் ப.கௌரீசன் பாராட்டப்படவேண்டியவர். இன்றைய இளஞ்சமுதாயத் திற்கு ஓர் எடுத்துக் காட்டாக சிறு வயதிலேயே (வயது 14) அவர் அரங்கேற்றம் காண்பது அவரின் தன்னம்பிக்கை, ஆளுமை, கலைஞானம், கலைச்சேவை என்பவற்றிற்குக் கட்டியம் கூறி நல்லதொரு கலைச் சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்துணை வேலைப்பழுவுக்கு மத்தியிலும் தம் குமாரனை சிறந்த ஒரு குருவிடம் சிக்ஷைக்கு ஈடுபடுத்தி கலை வளர்த்த பெற்றோருக்கு இணுவை மண் என்றும் நன்றி செலுத்தும்.

இவற்றுக்கெல்லாம் வழிசமைக்கும் இளந்தொண்டர் சபையினரின் பணியும் மிகமிக மெச்சத்தக்கது.

கலையின் வடிவமான ஆடவல்லான் சிதம்பர சபையில் எந்நாளும் ஆடி உலக ஆன்மாக்களை ரட்சிப்பதுபோல செல்வன் கௌரீசனும் பல சபைகளை அலங்கரித்து தன் கலையில் மென்மேலும் வளர்ந்து மக்களை வசீகரித்து தனக்கும், குருவுக்கும், பெற்றோர்க்கும், இணுவிலுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனப் பரம்பொருளைப் பிரார்த்தித்து எனது குரு ஆசிகளையும் தெரிவிக்கிறேன்.

**"இசையே இன்பம்"**


இங்ஙனம்,

பிரம்மஸ்ரீ குமாரசரவணபவக்குருக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின் ஆசிச்செய்தி

சீரும் திருவும் கலைச்சிறப்பும் மிக்க இணுவைத்திருவூரில் புகழ்பூத்த கலைப்பாரம்பரியத்தில் பிறந்தவர் செல்வன். பரமேஸ்வரன் கௌரீசன் இச்சிறுவனின் சிரித்த முகமும் கலை ஆர்வமும் தொட்டில் பருவத்திலேயே கண்டு ரசித்தவன் யான். நண்பர் பரமேஸ்வரன் அவர்களுடன் இருந்த உறவுக்கு மேலான நட்பு நீண்டது. பரமேஸ்வரன் அவர்கள் பேரறிஞர் வித்துவான் A.S இராமநாதன் வீட்டில் மிருதங்கம் பழகிய நாட்கள் எனக்கு ஞாபகமுண்டு. நண்பர் அருட்சோதி அவர்களின் வீட்டில் மணற்தரையில் எழுபதுகளில் இரவில் நடைபெற்ற உரையாடல்களில் பரமேஸ் முக்கியமானவர். இயற்கையாக கலை, சமயம், பண்பாடு பற்றிய பரந்த சிந்தனை, கற்பனை பரமேஸ் அவர்களிடம் நிறையவே இருந்தது. அதற்காக எழுந்த களமே இன்று இணுவில் இளந்தொண்டர் சபை என்ற பெயரில் விருட்சமாக வளர்ந்து காட்சியளிக்கிறது.

பரமேஸ் உருவாக்கிய வளங்களே இன்று பல மிருதங்க வித்துவான்கள் இணுவிலில் தோன்றக் காரணமாயிற்று. அதன் தொடர் பரிநாம வளர்ச்சியாக பரமேஸ்வரன் அவர்களின் இளைய புத்திரன் அரங்கேற்றம் காணும் செய்தி ஆனந்தமான பெருமகிழ்வைத் தருகிறது. மூத்த மிருதங்க மேதை நற்குரு. ப.சின்னராசா அவர்களிடம் தன் மழலைப்பருவம் முதல் கற்ற இச்சிறுவன் தன் ஆற்றலை வெளிப்படுத்தும் உன்னத நாள் சிறக்க இணுவைக் கந்தனை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன். சிறுபராயம் முதல் சமயச் சொற்பொழிவு நாடகம் எனப் பல அரங்குகளைச் சந்தித்த பெருமை கௌரீசனுக்கு உண்டு. கலையின்பமே நிலையின்பமாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்து வாழ்வது அவன் செய்த பாக்கியம். கௌரீசனது தாய் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதம நூலகர். அவர்களும் கலையிலும் பக்தியிலும் பேரார்வமுடையவர். கௌரீசன் நந்தியெம் பெருமானின் நற்கலையை நானிலம் போற்ற மேன்மைப்படுத்துவான் என்பது என் நம்பிக்கை. சகல துறைகளிலும் வெற்றி பெற்று எமது கிராமத்துக்கும் எம் திருநாட்டுக்கும் பெருமை மிக்க அறிஞனாக எதிர்காலத்தில் திகழ மீண்டும் வாழ்த்தி ஆசி கூறி அமைகிறேன்.

***"யாவர்க்குமாம் இன்னுரை தானே"***

**ஆறு. திருமுருகன்,**
**அதிபர்,**
**ஸ்கந்தவரோயக் கல்லூரி,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை**

**தலைவர்,**
**ஸ்ரீ. துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள்

# வழங்கும் ஆசியுரை



தோல் வாத்தியக் கருவிகளுள் தொன்மையானதும், முதன்மையானதும், இசை நடன நாடகங்களுக்கும், கோவிற் கிரியைகளுக்கும் வாசிக்கப்படும் வாத்தியம் தண்ணுமையாகும். சிவனார் திருக்கரத்தில் "டமருகமாக" உதித்து, பின் அவர்தம் திருக்கரத்தினாலேயே மிருதங்கமாக உருவாக்கம் பெற்று நாராயணரதும், நந்தி பகவானதும் திருக்கரங்களிலே லயநாத கதிபேதமாகப் பரிணமித்து, தேவரும், மூவரும், ரிஷிகளும், சிவனார் திருநடனத்தைப் பார்த்தும், கேட்டும், ரசிக்கும் வண்ணம் வாசிக்கப் பெற்ற பெருமை மிக்க வாத்தியம் மிருதங்கமாகும்.

இயற்கை வளங்களும், பக்தி நிறைந்த ஆலய சூழல்களும், பற்பல நிறுவனங்களும், பல்வேறு அங்காடிகளும், கல்லூரிகளும், இசைக்கலை மன்றங்களும், வைத்தியசாலைகளும், நூலகங்களும், பல்துறை வித்தகர்களும் நிறைந்து விளங்கும் திருவூர் இணுவில் ஆகும். காலங்காலமாக இசையினையும், கல்வியினையும் சமயத்தினையும் முழு மூச்சாக வளர்த்துவரும் மன்றங்களுள், சிறப்பாகத் தமது பணிகளைத் திறம்பட தொடர்ந்து நடாத்திவரும் சபை "இணுவில் இளந்தொண்டர் சபை" என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச் சபையினரால் லலித கலைகளாம் வாய்ப்பாட்டு, பண்ணிசை, மிருதங்கம், வீணை, வயலின், நடனம் போன்ற கலைகள் யாவும் அனுபவமிக்க ஆசிரியர்களால் போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இத்துறைகளில் பயிற்சி நிறைவு பெற்றும், அரங்கேற்றம் பெற்றும், மேலதிகமாக உத்தியோக உயர்வு பெற்றும், இலங்கையிலும், வெளி நாடுகளிலும் கடமையாற்றுவதோடு, தாம் பயின்ற கலைகளையும் பயிற்றுவித்து வருவது மன்றத்திற்குப் பெருமை சேர்ப்பதாகும். சுமார் பத்து வருடங்களாக "இணுவில் கிராமிய கல்லூரியிலும்" சுமார் முப்பது வருட காலமாக "இணுவில் இளந்தொண்டர் சபையிலும்" மிருதங்க ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன்.

இம்மன்றத்தின் மூலம் பல மாணவர்கள் உருவாகியதோடு அவர்கள் இன்று தொழில் வாய்ப்புகளையும் பெற்று நல்ல நிலைமைகளில் வாழ்ந்து வருவதோடு, இக்கலையினையும் மாணவர்களுக்குப் பயிற்றுவித்து வருவதை அறிந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமகிழ்ச்சி அடைகின்றேன். திரு.திருமதி.பரமேஸ்வரன் தம்பதிகளின் அரிய முயற்சியின் பயனாக அவரது மகன் செல்வன் கௌரீசன் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் மன்றத்தின் மூலம் (29-01-2012)இல் இன்று நடைபெறவுள்ளது. நாடகம், பண்ணிசை, சங்கீதம், மிருதங்கம் போன்ற கலைகளில் அதிக ஆர்வமும் பயிற்சிகளும் உடைய திரு.பரமேஸ்வரன் அவர்கள் எனது குருநாதர் உயர்திரு ஏ.எஸ்.ராமநாதன் அவர்களிடமும், பின்னர் என்னிடமும் மிருதங்கத்தினைப் பயின்று முற்றுப் பெறாத காரணத்தினால் தனது மகன் செல்வன் கௌரீசன் அவர்களை இக்கலையில் பயிற்றுவித்துத் தமது ஆவலைப் பூர்த்தி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இம் மாணவன் கல்வித் தரத்தில் எட்டாம் வகுப்பிலும் வட இலங்கை சங்கீத சபையினரின் மிருதங்க பரீட்சையில் தரம் நாலாம் ஆண்டு தரத்திலும் சித்தி பெற்றுள்ளார்.

இவரது மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சியும், எனது பேராசான் உயர்திரு. ஏ.எஸ்.ராமநாதன் அவர்களைப் பணிந்தும் எனது பூரண ஆசிகளை வழங்கி மகிழ்கின்றேன்.

சுபம்

**கலாபூஷணம்**
**க.ப.சின்னராசா**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் செல்லப்பா நடராசா அவர்கள் வழங்கும் ஆசிச் செய்தி

## சீர் இணுவைத் திருவூரின் திருவே வாழி வாழி!



இணுவிலில் ஓர் மிருதங்கச் சக்கரவர்த்தியாக செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் ஒளிர வேண்டும் என முதற்கண் எனது ஆயிரம் நல் ஆசீர்வாதங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கலை வளர்க்கும் நல்லாசான் நவரத்தினம் பரமேஸ்வரன் வானதி தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் செல்வன் கௌரீசனின் மிருதங்க அரங்கேற்றம் தைத்திங்கள் வளர்பிறைச் சஷ்டியான 29.01.2012 இன்று இணுவில் இளந்தொண்டர் சபையின் மண்டபத்தில் நிகழ்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

செல்வன் கௌரீசன் பிரபல மிருதங்க வாத்திய நிபுணர் கலாபூசணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவன் என்பதை அறிகையில் எனது மகிழ்ச்சி மேலும் இரட்டிப்பாகிறது. திரு.சின்னராசா அவர்கள் இராமநாதன் பல்கலைக் கழகத்தில் மிருதங்க விரிவுரையாளராக உள்ளார். மிருதங்க உலகில் உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி நன்கு அறியப்பட்டவர். தமது துறையில் மிகுந்த அனுபவஸ்தர். அத்தகைய ஒருவர் செல்வன் கௌரீசனுக்குக் குருவாக வாய்த்தமை அவர் செய்த பாக்கியமே. குரு எப்படியோ சிஷ்யனும் அப்படியே வித்துவத்தன்மையில் மிளிர்வது வழமை.

செல்வன் கௌரீசனது மிருதங்க அரங்கேற்றம் 29.01.2012 இன்று இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறுகிறது. இணுவில் இளந்தொண்டர் சபையின் மிருதங்க வகுப்பில் கற்றுத்தேறிய இருபத்தோராவது அரங்கேற்றத்தில் செல்வன் கௌரீசன் பங்கேற்றுவதை எண்ணும் போது இதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அரங்கேற்றம் என்றே வர்ணிக்கத் தோன்றுகிறது.

கொக்குவில் இந்துவில் இன்று ஒன்பதாம் ஆண்டில் கல்வி பயிலும் செல்வன் கௌரீசனுக்கு இன்று அகவை பதின்மூன்றே பதின்மூன்றுதான். குட்டிப்பயல், சுட்டிப்பயலுங்கூட. அகில உலக தவில் மேதையாக விளங்கிய வி.தட்சிணாமூர்த்திப் –பிள்ளையும் இந்த வயதிலேயே தவில் வாத்தியத்தில் பிரகாசிக்கத் தொடங்கி இருந்தார் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. செல்வன் கௌரீசனும் அவ்வாறே எனக்கொள்ளலாம். இந்தப்பிஞ்சு வயதில் அவர் மிருதங்க வாத்தியத்தில் அரங்கேற்றம் காணுவது வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் ஒரு துறையில் புலமையாளராக வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். வேறு சிலரோ பிறக்கும் பொழுதே புலமையாளராகத் தான் பிறக்கிறார்கள். தவில் மேதை தட்சிணாமூர்த்திப்பிள்ளை கருவிலேயே மேதையாக வளரத் தொடங்கியவர். செல்வன் கௌரீசனும் அவ்வாறே எனப் பெருமை அடைவோமாக.

இணுவில் கிராமம் பண்டைய நாட்களில் "இணையிலி" என்றே அழைக்கப்பட்டதாக கற்றறிந்தோர் கூறுவர். இணையில்லாத கிராமம் என்பது இதன் பொருளாகும். தமிழில், சைவத்தில், இசையில், நாடகத்தில், கூத்தில், நடனத்தில், நாதஸ்வர தவில் இசையில், சமய வாழ்வியலில், கலை கலாசாரங்களில், புராண படனங்களில், ஆசாரசீலங்களில், திருக்கோயில்களில், புராண இதிகாசங்களில் விவசாயத்தில், காவடி கரகாட்டங்களில் இணுவில் கிராமம் என்றுமே இணையில்லாமல் ஒளிர்ந்துள்ளமையை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இன்றும் உலகப் பெருமஞ்சம் இணுவிலில் தானே உள்ளது.

இத்தகைய இணையில்லாத இணுவில் கிராமத்தை சேர்ந்த செல்வன் கௌரீசன் தமது துறையிலும் கல்வியிலும் இணையில்லாதவனாக வாழ்வில் வளர. ஒளிர, உயர, மேன்மையடைய எல்லாம் வல்ல நொச்சியம்பதியானை வணங்கி வாழ்த்திக்கொள்கிறேன்.

செல்வன் பரமேஸ்வரன். கௌரீசனது புகழ்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் முழுமையாகப் பங்குகொள்கிறேன்.

சீர் இணுவைத் திருவூரின் திருவே வாழி வாழி

**கலாபூசணம் செல்லப்பா நடராசா .** ச. நீ மூத்தபத்திரிகையாளர்
தினகரன் நாளிதழ் முன்னை நாள் அலுவலர் எழுத்தாளர்
பாராளுமன்ற ஓய்வுநிலை சிரேஷ்ட அறிக்கையாளர்
நெட்டிலிப்பாய் பிள்ளையார் திருக்கோயில் பரிபாலனசபை முன்னை நாள் தலைவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



அருள்மிகு ஆலயங்களால் நிறைந்து விளங்கும் இணுவில் திருவூரில் சிவநெறியும், செந்தமிழும் ஆயகலைகளும் விவசாயம் மற்றும் இதர தொழில்களும் அன்று சிறந்து காணப்பெற்றன. ஏனைய கிராமங்களுள் இக்கிராமம் இணையில்லாத பெருமையுடன் காணப்பட்டதால் "இணையிலி" என அழைக்கப்பெற்றது.

இப்புனிதமான புண்ணிய பூமியில் திருக்காஞ்சியிலிருந்து எழுந்தருளிவந்து இங்கு குடிகொண்டு நொச்சியம்பதி என்னும் திருத்தலமாக யாவராலும் போற்றப்படும் காஞ்சியம்பதி முருகன் இத்திருவூரின் மேற்கில் அருள்பாலிக்கிறார். பல அற்புதங்களையும் செய்தருளிய கந்தப்பெருமான் இச்சூழலிலுள்ள வாலிபர்களின் நெஞ்சிற்குடி கொண்டு தன்பணியாற்றுமாறு உணர்த்தினார். இறையருளும் எம்மக்களின் அபார பக்தியும் கந்தப்பெருமானின் ஆலயத்தை உள்ளும் புறமும் புனிதமாக்கவும் பெருவிழாக்காலங்களில் அவன் புகழ் பாடவும் இணைந்த வாலிபர் கூட்டம் தம்மை இணுவில் இளந்தொண்டர் சபை என அழைக்க உறுதி பூண்டது. இதயபூர்வமான ஆலயப்பணி இளந்தொண்டர்சபையினரிடம் குடி கொண்டது. இத்தூய பணி எதிர்காலத்திலும் நிலைக்க வேண்டிய பொது நோக்கில் இச்சூழலிலுள்ள பிற்சந்ததியினரையும் இணைக்க முன்வந்தனர்.

இதன் நோக்காக முன்பள்ளியையும் கலைவகுப்புகளையும் தொடக்கி மாணவர்களைத் திறம்பட இயக்கினர். இந்தப் பிஞ்சுப் பருவத்தினர் சமயநெறி, பண்ணிசை, வாய்ப்பாட்டு, மிருதங்கம், வீணை, வயலின், நடனம், சொற்பொழிவு, நாடகம் போன்ற பல கலைகளையும் கற்க ஏதுவானது. ஒவ்வொரு துறைக்கும் புகழ்பெற்ற கலா விற்பன்னர்கள் அருங்கலைப் பயிற்சி கொடுத்து வந்தனர். மாணவர்களும் வெகு சிறப்பாக கற்று மேலோங்கினர்.

இவ்வகையில் மிருதங்க வகுப்பை பிரபல மிருதங்க வித்துவான் திரு.க.ப.சின்னராசா அவர்கள் முப்பது வருடங்களாக வருடா வருடம் எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களை நெறிப்படுத்தினார். இவர்களுள் பலர் தமது மேற்படிப்பு, இடமாற்றம், இடப்பெயர்வு போன்ற காரணங்களால் வகுப்புகளைத் தவறவிட்ட போதும் நல்லாசானும் மேதையுமான கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்களின் அயராத பெருமுயற்சியால் இங்கு கற்ற இருபது மாணவர்கள் மிருதங்க இசை அரங்கேற்றங் கண்டனர். இவர்கள் தாம் கற்றுக் கொண்ட மிருதங்க இசையை உள்ளூரிலும் வெளி மாவட்டங்களிலும், தமிழ்கூறும் நல்லுலகெங்கும் இதயசுத்தியுடன் பரப்பி வருகின்றனர். தமிழர்தம் பாரம்பரியக் கலைகளான மிருதங்கம் உட்பட சகல கலைகளையும் பிரபலப்படுத்தி எம் மண்ணுக்குப் புகழ் சேர்த்தனர். இன்றும் இப்பாரம்பரிய கலைகள் சிறப்புடன் திகழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாணவர்களின் வரிசையில் இணுவில் இளந்தொண்டர்சபை அறநெறிப்பாடசாலை மாணவன் பரமேஸ்வரன் கௌரீசன் என்பவர் ஏனைய கலைப்பாடங்களுடன் ஏற்கனவே மிருதங்க இசைக்கல்வியிலும் தன்னை இணைத்துக் கொண்டார். மிருதங்க மேதை கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்கள் கடந்த முப்பது வருடங்களாகப் பல மாணவர்களை உருவாக்கித் தமது முத்தான அனுபவச் சிறப்பால் பார்போற்ற உயர்த்த வேண்டுமெனச் சித்தங் கொண்டார். அவரின் முதுமைக் காலத்திலும் துடிப்புடன் இசைக்கலை உலகம் வியக்கத் தம்மை அர்பணித்தார். இச்சிறப்பை இன்று நாம் கண்டும் கேட்டும் இன்புற வைத்த இறையருளைப் போற்றுவோம்.

இணுவில் கிராமத்தில் சிறப்பான எண்ணற்ற பல நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் ஆவணமாகப் பதியப்படாமை எமது பேதமையே. இன்று நடைபெறும் கௌரீசனின் மிருதங்க இசை அரங்கேற்றம் இருபத்தோராவது சிறப்பான அரங்கேற்றமாதலால் இதனைப் பதிவு செய்யும் நோக்கில் இச் சிறப்பு மலரை வெளியிடத் திருவருள் பாலித்தது.

இறையருளும், குருவருளும் நல்லாசி கூற இன்றைய விழா ஏற்பாட்டில் சிறப்பு மலரினை வெளியிட பரமேஸ்வரன் வானதி தம்பதியினர் இறையருளை வேண்டினர். திருவருளும் கைகூட்டியது. எமது நன்றிக்குரிய பல பெரியார்கள் தமது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் எழுத்துருவில் தந்து பெருமைப்படுத்தினர். மிகக்குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்த இவ்வரங்கேற்றவிழாவில் இச் சிறப்புமலரை வெளியிடத் தூண்டிய கந்தப் பெருமானுக்கு முதற்கண் நன்றிகள். எமது வேண்டுதலை ஏற்று இன்முகங்காட்டி இனிய கருத்துக்களை ஆசியுரை, வாழ்த்துரையாகவும், கட்டுரையாகவும் தந்துதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் குறுகிய காலத்தில் அழகிய மலராக மலரவைத்த இணுவில் "சுடர்நிலவு கிரபிக்ஸ்" ஸ்தாபகர் திரு.பா.ராஜேஷ்கண்ணா அவர்களுக்கும் விழாக்குழுவின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த மலர் சிறப்புடன் மலரவும் விழா இணுவில் கிராமத்தின் பாரம்பரியக் கலைகளைத் தொடர்ந்து வளர்த்து வரவும் அருள்பாலிக்கும் பரராச, செகராசசேகர விநாயகர்களுக்கும் நொச்சியம்பதியிலுறை காஞ்சிக்குமரனுக்கும் இம்மலரினை உள்ளன்போடு காணிக்கையாக்குவதில் மன நிறைவடைகின்றோம்.

- நன்றி -

மூ.சிவலிங்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்







# இணுவில்
# சைவத்திருநெறிக் கழகத்தினரின்
# வாழ்த்து மடல்

கரவருடம் தைத்திங்கள் பதினைந்தாம் நாள் (29.01.2012) வளரும் சஷ்டியில்
மிருதங்கக்கலை அரங்கேற்றங் காணும் பரமேஸ்வரன் கௌரீசனாம் சேயே!
"கலைஞானசுரபி" யாக என்றும் பலசீருடன் நீடூழி வாழி!



முத்தமிழும் அலைபாயும் சீரிணுவைக் கந்தன் பணிபோற்றும்
வித்தகனாம் பரமேஸ்வரன் - வானதி பெற்றெடுத்த கலைபயில்
தவப்புதல்வன் கௌரீசன் கருவிலே உணர்ந்த கலைஞானத்தால்
அவனிதனில் இணுவைமாதா புகழ்சேரச் சிவகலைபோற்றி வாழி!



எத்திக்கும் அருள்பொழியும் சந்நிதியான் கழலடியில் கலைப்பணியாம்
முத்திக்கு வித்தாகும் சைவப்பிரசங்கத்தை அகவை ஒன்பதினில்
பிஞ்சு மொழி பேசி ஏற்றமிகு கலைச்சிறப்பை வெற்றியுடன் நிலைநாட்டி
விஞ்சு புகழ்தமிழின் சுவையழகால் பேரவைதனிலே பெரும் புகழீட்டினாய் வாழி!

ஆயகலைகள் பலபோற்றி மேலோங்கு புகழ் சேர்த்திடும் சீரிணுவையில்
தூயசைவத் தமிழ் வளர்க்கும் இளந்தொண்டர் சபை அணியில்
பெருமைசேர் கலைஞனாகப் பாரதனில் விளங்கவைக்கும் சிறப்புமிகு
சீரும் பெற்ற சேயோனாக நின் அன்னையவள் அகம்குளிர வாழி!



கலையுலகில் செந்தமிழின் சுவையோடு பண்ணிசையும் பிரசங்கமும்
அலைபாயும் இசையணியுடன் நாடக நடிப்பதனால் பார்போற்றும் இணுவில்
இளந்தொண்டர்சபையின் புகழ்மணக்க நொச்சியம்பதியான் பெருமை
விளங்கும் மண்மீது பல்கலையும் போற்றும் "கலைஞானசுரபி"யாக வாழி!


நந்திதேவர் அரவணைத்த அருங்கலையாம் மிருதங்க இசைதனை
எந்தைமுரு கேசனார் ஆசியுடன் மிருதங்கக்கலை அரங்கேற்றங் காணும் நின்
திறமைசேர் புகழதனை ஊரெல்லாம் உறவோடு போற்றிட இணுவில் சிவகாமி
அறநெறிசேர் சைவத் திருநெறிக் கழகமாம் நாமும் உளமார வாழ்த்துகின்றோம்.

**வாழ்க வளமுடன் பல்லாண்டு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபை மண்டபத்தில் நடைபெறும் பரமேஸ்வரன் கௌரீசனின் மிருதங்க அரங்கேற்றத்தின் போது இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபை இசை வகுப்பு அறநெறிவகுப்பு ஆசிரியர்களினால் வழங்கிய வாழ்த்துப்பாமாலை

அந்தமிலா ஆதிசிவன் கருத்துடன்
அருளிய மிருதங்கக் கலை
நந்தியெம் பெருமான் மாண்புடன்
இசைத்த வாத்தியக்கலை
கந்தப்பெருமான் பதியில் திறத்துடன்
பயின்ற திருவருட் கலை
தந்தமுகப் பெருமான் வரந்தந்து
அரங்கேற்றம் காணும் தாளலயக்கலை

பெருமை பல பேசும் சீரணுவைப் பதியில்
எமைக்காக்கும் முருகப்பெருமான்
திருவருளால் தொண்டாற்றும்
சைவப் பணிமனை நல்கும் வித்தைகளை
குருவருளால் விளங்கப் பெற்று
நல் மாணாக்கானய் பணிந்து கற்று
சொரூபமான நயத்துடன் அரங்கு
ஏற்றம் காணும் இசைஞானக்கலை



பேர்பூத்த க.பசின்னராசா ஆசான்
இவரை குருவாக மதித்து
சூர்மதியுடன் நுட்பக்கலை பயின்று
திறனுடன் அரங்கேற்றம் நிகழ்த்தும் கௌரீசன்
சீர் பல நல்கும் எம்பெருமான் பாதம்
பணிந்து சிறந்து நல்வாழ்வு வாழ்க என
பார் புகழும் கந்தனின் சக்தியினை வேண்டி
வாழ்த்தி மகிழ்கின்றோம்.




சுபம்

இணுவில் 29.01.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





## இணுவில் திருநெறிய தமிழ்மறைக்கழக சார்பில்
## ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார்
## அறநெறிப் பாடசாலையின் பொறுப்பாசிரியர்
## கலாபூஷணம் பண்டிதை
## திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின்



## நல்வாழ்த்துப்பா




தெய்வத் தமிழ்க் கலைமிளிரும் இணுவையம்பதிசேர்
கலைஞன் பரமேஸ்வரன் தம்பதிகள்
செய்தவத்தால் பெற்ற செல்வன் கௌரீசன் நல்ல
இளைஞரில் இளையான் இணையிலாப் பெற்றி
தெய்வீகக் கலைமிளிரும் சிறுவன் பேச்சுவல்லான்
நடிப்பாற்றல் மிக்கான் சிறந்த பிரசங்கி
ஐயன் கௌரீசன் மேலும் கலைமிளிர பேச்சுத்திறன் மிளிர
சைவத்தமிழ் மிளிரப் பல்லாண்டு வாழி வாழி!




திருவருளும் குருவருளும் பெற்று நல்ல கல்வி
சொற்சோர்விலாத பேச்சு மேலோங்க வாழி!
அறநெறியாம் சைவப் பணிபல செய்த நற்சுகப்
பேற்றுடன் கௌரீசன் நலமாக வாழி!
பெருகி வரும் அன்புகொண்டு பெற்றோருடன்
பெரியோர் அறிஞர் வாழ்த்த வாழி
அருள் நிறைந்து அன்பு நிறைந்து நிறையாயுள்
நற்புகழ் மேலோங்கி பல்லாண்டு வாழி! வாழி!

சின்னஞ்சிறு வயதில் சைவத்தமிழ்க் கலைகள் பல கற்றதன் பயனாகத் தமிழ்ச்சொற்பொழிவுடன் நடிகனாகவும், பண்ணிசை பாடியும், தூய மிருதங்க இசையையும் இனிதே கற்று இன்று அரங்கேற்றம் காணும் நின்கலைப் பொலிவை மேலும் வளர்க்குமாறு எங்கள் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி.



**கலாபூஷணம் பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

மருதனார்மடம்,
சுன்னாகம்
☎-021 3215545

මරුතනාර්මඩම,
චුන්නාකම්

Maruthanarmadam,
Chunnakam

✉: apdeedne@sltnet.lk

எனது இலக்கம் / මගේ අංකය / My No

உமது இலக்கம் / ඔබේ අංකය / Your No

# வாழ்த்துச் செய்தி



மனிதனை மனிதனாக வாழ வைப்பதில் இசைக்கலை முக்கிய இடத்தைப் பெறுகிறது. இசைக் கலைகளுள் ஒன்றான மிருதங்கக் கலையில் பாண்டித்தியம் பெற்ற கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவன் செல்வன். பரமேஸ்வரன் கௌரீசன் தன் இளம் வயதில் மிருதங்கக் கலையைக் கற்று அரங்கேற்றம் செய்வதைப் பாராட்டு கிறேன். கலைகள், படைப்போரை மட்டுமன்றி அதனை இரசிப்போரையும் மகிழ்விக்கும் பாங்கினைக் கொண்டவை. மிருதங்கக் கலையைப் பயில ஆதாரமான இளந்தொண்டர் சபைக் கலைக்கூடத்துக்கும், தான் கல்வி பயிலும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இசை வல்லமையால் பெருமை தேடிக் கொடுத்த

**கௌரீசனுக்கும் அவர் தம் குருவுக்கும்**

**"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்"**

எல்லா வல்லமைகளையும் அருள வேண்டும் எனப் பிரார்த்தித்து என் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

***"மிருதங்க இசையால் உலகினை வசப்படுத்த***

***என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்"***

**ப.விக்னேஸ்வரன்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**வட மாகாணம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்கள்

### (கணிதத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

### இணுவில் கந்தசுவாமி கோவில்

### இளந்தொண்டர் சபை பொதுச்சபைத் தலைவர் வழங்கும்

### வாழ்த்துரை.



இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை கடந்து மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சங்கீதம், பரத நாட்டியம், வீணை, வயலின், மிருதங்கம், பண்ணிசை போன்ற கலைவகுப்புகளை வெற்றிகரமாக நடாத்திக் கொண்டிருக்கிறது.

இக்கலை வகுப்புகளைத் தொய்ய விடாமல் நடாத்துவதில் முக்கிய பங்காற்றிக் கொண்டிருப்பவர் திரு. நவரத்தினம் பரமேஸ்வரன் அவர்கள். இளந்தொண்டர் சபையில் பயிற்றப்பட்ட பல மாணவர்களின் மிருதங்க அரங்கேற்றம் நிறைவேற்றப்பட்டன. இவ்வகையில் முதலாவதாக அரங்கேற்றப்பட்ட மாணவன் திரு. கஜன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் மிருதங்கப் போதனாசிரியராகக் கடமையாற்றுகிறார். மேலும் மிருதங்கத்தில் பயிற்றப்பட்ட பல மாணவர்கள் பல்கலைக்கழத்தில் மாணவர்களாகவும் வெளிநாடுகளில் மிருதங்க ஆசிரியர்களாகவும் உள்ளனர். இந்த வகையில் திரு. பரமேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன் கௌரீசன் அவர்கள் இளந்தொண்டர் சபையில் மிருதங்கம், சங்கீதம், பண்ணிசை, வீணை, நாடகம் போன்ற பல கலைகளில் மிகவும் ஆர்வமாகப் பயின்று வருகின்றார். இவருடைய மிருதங்க அரங்கேற்றம் இன்று (29.01.2012) இளந்தொண்டர் சபை கலாசார மண்டபத்தில் நடைபெறுகிறது. செல்வன் கௌரீசன் அவர்கள் இவ்வரங்கேற்றத்தைத் தொடர்ந்து மிருதங்கத்தில் மேலும் பல நுண் அறிவுகளைப் பெற வேண்டும் என்று சண்முகப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர். இ.விக்னேஸ்வரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வன் ப.கௌரீசன் தனது குரு கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்களுடன்



குடும்பத்தினருடன் ப.கௌரீசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக்கல்லூரி
# J/ KOKUVIL HINDU COLLEGE

ESTD 1910

Principal :
A. Ahiladas M.Ed, SLPS 1

Deputy Principals :
Mrs. K. Krishnapillai B.A, SLPS 2-1
K. Velautham B.Sc, PGDE, SLTS 1

T.P. : 021 222 2646
021 321 4017
E.Mail : kokuvilhindu@yahoo.com

கொக்குவில்.
Kokuvil,
(Sri Lanka)

Date : 14/ 01/ 2012



## இளம் கலைஞன்
## செல்வன் ப.கௌரீசன் வாழ்க!

வடபுலத்தில் சைவத்தையும் தமிழையும், தமிழர் பாரம்பரியம், கலை, பண்பாடு, விழுமியம் போன்றவற்றை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் தனித்துவமான ஊர் இணுவையூர் என்பது யாவராலும் அறிந்த உண்மை. எமது மொழிக்கும் சமயத்திற்கும் பண்பாட்டிற்கும் அந்நிய இனத்தவர்களால் சவால்கள் வந்த பொழுது அச்சவால்களிலிருந்து பாதுகாத்தவர் நாவலர்பெருமான். நாவலர் காட்டிய சீரிய பாதையில் வழிப்படுத்துகின்ற பெருமை இணுவையூருக்கு உண்டு. இவ் ஊரில் காணப்படுகின்ற சைவ ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், கல்லூரிகள், இளந்தொண்டர் சபை போன்றன இச்செயற்பாட்டினை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகின்றன.

எமது கல்லூரியில் கற்கின்ற மாணவர்கள், கற்பிக்கின்ற ஆசிரியர்களிடையே இத்தகைய பண்புகளை நேரடியாகக் காண முடிகின்றது. கல்லூரியில் நாடகங்கள், இசை நிகழ்வுகள், கூத்துகள் போன்ற நிகழ்ச்சிகளில் இவ்வூர் மாணவர்களே அதிகளவில் பங்கு கொள்கின்றனர். எமது கல்லூரியில் வட இலங்கை சங்கீத சபை நடத்துகின்ற பரீட்சைகளில் இவ்வூர் மாணவர்களே அதிகளவில் தோற்றுகின்றனர். இவர்களை விசைப்படுத்துவதிலும் திசைப்படுத்துவதிலும் இணுவில் இளந்தொண்டர் சபை என்பது குறிப்பிடத்தக்கது. இச்சபை இளம் வயதினருக்கு பண்ணிசை, சங்கீதம், மிருதங்கம், வீணை, நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களைக் கற்பிப்பது பாராட்டத்தக்கது.

இளந்தொண்டர் சபையில் கல்வி கற்கின்ற எமது கல்லூரி மாணவன் செல்வன். பரமேஸ்வரன் கௌரீசன், கலாபூஷணம் க.ப.சின்னராசா ஆசிரியரால் மிருதங்கம் பயிற்றுவிக்கப்பட்டு அரங்கேற்றப்படுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன் அம்மாணவன், அவரது பெற்றோர், பயிற்றுவித்த ஆசிரியர் ஆகியோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. அ. அகிலதாஸ்.
அதிபர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வே.பிரேமச்சந்திரன் அவர்களின் வாழ்த்துச்செய்தி




ராஜவாத்தியம் எனப் போற்றப்படும் மிருதங்கக் கலையை முதுபெரும் கலைஞர் கலாவித்தகர் க.ப.சின்னராசாவைத் தனது குருவாகக் கொண்டு இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபைக் கலைக்கூடத்தில் பால வயது முதல் பயின்று குருவின் தாள லய நுணுக்கங் களைத் தன்னகத்தே உள்வாங்கித் தனது பதின்நான்கு வயதில் அரங்கேற்றம் காணும் பரமேஸ்வரன் கௌரீசனை மனமார வாழ்த்தி க.கஜன், க.தேசிகன், நா.சிவசுந்தரசர்மா, அ.அமிர்தசிந்துஜன் ஆகிய பலரின் வரிசையில் இணுவைக்கும் இளந்தொண்டர் சபைக்கும் மேலும் புகழ் சேர்க்க எல்லாம் வல்ல இணுவைக்கந்தன் அருள்புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இந்தச் சிறப்பு மிக்க வேளையில் எனக்கு வாழ்த்துரைக்கச் சந்தர்ப்பம் தந்த பரமேஸ்வரன் குடும்பத்தாருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இளம் கலைஞனை கலையுலகிற்கு அளித்த இளந்தொண்டர் சபையையும் இவ்வேளையில் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வண்ணம்

***வே.பிரேமச்சந்திரன்,***
***பணிப்பாளர்,***
***பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,***
***முன்னாள் தலைவர்,***
***இளந்தொண்டர் சபை,***
***இணுவில் கந்தசுவாமி கோவில்.***








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் சங்கீதபூஷணம்

# சுப்பையா கணபதிப்பிள்ளை அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



செல்வன் பரமேஸ்வரன் கௌரீசன் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் இம்மாதம் 29ஆம் நாள் நடைபெற விருப்பதாக அறிந்தேன்; மகிழ்ந்தேன்.

ஈழவள நாட்டின் சிரசாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் இணுவில்பதி கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகிய வற்றால் புகழ்ந்து போற்றப்படுகிறது. காரணம் சைவ ஆலயங்களும் கிரியைகளும் ஒழுங்காக நடைபெற்று இறை ஆசி கிடைப்பதே என்றால் மிகையாகாது.

அரங்கேறும் செல்வனைப் பெற்றுச் சீராக வளர்த்தெடுக்கும் பெற்றோர் இப்பராய காலத்திலே கற்கவேண்டிய சீலங்களைக் கற்பிக்கின்றனர். தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பதற்கிணங்க மேற்கூறிய சற்குணங்கள் நிறைந்த கலாபூஷணம் கலாவித்தகர் பல மாணவர்களைப் போதித்து அரங்கேற்றிய பெருமைக்குரியவர் திரு.க.ப.சின்னராசா அவர்கள்.

ஒரு பாடலுக்கோ, பாட்டு வாத்தியக் கலைஞருக்கோ உந்து சக்தியாக இருந்து அரங்கைச் சிறப்பிப்பதில் சிறந்து விளங்குவது மிருதங்க வாத்தியம். பிரதான கலைஞருக்கு லய சம்பந்தமாகத் துணை புரிவது மிருதங்கமே.

வளரும் பயிர்களுக்கு கல்வி கற்றலோடு கலையையும் கற்று வளர இணுவில் இளந்தொண்டர் சபை அரும்பாடுபடுவது போற்றுதற்குரியதே. அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற இறையருளும் பெரியோர் ஆசியும் கைகொடுக்க இனிது நடைபெறும் என்பது எனது நம்பிக்கை.

ஆசிரியர், பெற்றோர் மற்றும் இன்றைய விழாநாயகன் வளமுடன் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

கலாபூஷணம் சங்கீதபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை,
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
உப தலைவர் வட இலங்கை சங்கீதசபை.

பொன்னாலை,
சுழிபுரம்

09-01-2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் திருமதி N.சிறீதேவி அவர்கள் வழங்கும் வாழ்த்துச் செய்தி

கர்நாடக இசைக் கச்சேரிகளின் பங்களிப்பு மிகுந்த காத்திரம் மிக்கதாகும். இந்த வகையில் தோல் வாத்தியக்கருவிகளில் மிருதங்கம் மிகுந்த சமயவரலாற்று பின்னணியைப் பெற்ற ஒரு இசைக்கருவியாகும். நந்திதேவரால் சபையில் வாசிக்கப்பட்ட பெருமை பெற்ற இசைக்கருவி மிருதங்கம் ஆகும்.

இத்தகைய தோல் வாத்தியக் கருவியை குரு சிஷ்ய அடிப்படையில் மிகுந்த குரு பக்தியுடன் கற்றல் வேண்டும். ஈழத்தில் பல மிருதங்க வித்துவான்கள் உருவாகியிருக்கின்றார்கள். குருவைப் போலவே பல மாணவர்களும் தமது வித்துவத்தை அரங்கிலே பிரமிக்கத்தக்க வகையில் வெளிப்படுத்தி வருகின்றார்கள். இந்த வகையில் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள் பல மிருதங்க விற்பன்னர்களை உருவாக்கிய பெருமை பெற்றவர்.

அவரால் உருவாக்கப்பட்ட இளங்கலைஞன் பதின்மூன்று வயது நிரம்பிய செல்வன். பரமேஸ்வரன் கௌரீசன் அவர்கள் தமது திறனை வெளிப்படுத்தும் அரங்கேற்ற நிகழ்வை நடாத்த இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். சிறிய வயதுக் கலைஞனின் வருகையை நான் மட்டுமல்ல முழுக் கலையுலகமுமே மிகுந்த உவகையுடன் வரவேற்கின்றது.

அந்தவகையிலே மிருதங்க அரங்கேற்றம் காணும் செல்வன். பரமேஸ்வரன் கௌரீசன் அவர்கள் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் தரத்தில் கல்வி பயில்கின்றார். பாடசாலைக் கல்வியிலும் சிறந்து விளங்கும் இவர், பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக மிருதங்க கலையையும் மிகுந்த சிரத்தையுடன் கற்று தன் ஆற்றுகைத் திறனை 29.01.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் வெளிப்படுத்தவுள்ளமை அறிந்து அவரை வாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் மிகச்சிறந்த பக்க வாத்தியக் கலைஞராக இவர் திகழ வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கிறேன்.



**என். ஸ்ரீதேவி**
பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையின்**

**ஆரம்பகால பொதுச் செயலாளரும் ஆசிரியருமான**

**திரு. மா. சடாச்சரன் (கொழும்பு) அவர்களின்**



## வாழ்த்துச் செய்தி

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை நாற்பது வருடங்களுக்கு மேலாக மக்களிடையே சைவத்தையும், தமிழையும், கலைகளையும் வளர்ப்பதுடன் ஆன்மிக சிந்தனையைத் தூண்டி எமது கலை கலாசாரத்தைப் பாதுகாத்து வருவது பாராட்டுக்குரியது.

இச்சபையின் முக்கிய பணியாக ஆலயத் தொண்டு மாணவர் களிடையே சைவசமயத்தை வளர்ப்பதற்காக சைவசமயப் பேச்சுப் போட்டிகளை நடாத்தித் தக்க பரிசில்களையும் வழங்கி இளைஞர்களிடத்தே ஆன்மிக நெறியைப் பரப்புகின்றனர். இதே வரிசையில் அறநெறிப் பாடசாலையை நிறுவிச் செயற்படுவது சிறப்பாகும்.

இச்சபை கலாசார விழுமியங்களைப் பேணுவதற்காக பண்ணிசை, சங்கீதம், நடனம், வயலின், வீணை, மிருதங்கம், நாடகம் ஆகிய வகுப்புகளை நடாத்தி வருகிறது. இச்சபையின் மிருதங்க இசை ஆசிரியராக திரு.க.ப.சின்னராசா அவர்கள் கடமையாற்றுகின்றார். அவரிடம் பயின்ற இச் சபையின் மாணவர் பலர் மிருதங்க அரங்கேற்றம் கண்டுள்ளனர். இவர்கள் தமது திறமையால் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் மிருதங்க இசையைப் போதிக்கின்றார்கள். இவர் இச்சபையில் நீடிய காலமாகத் தமது வகுப்பை நடாத்துவது பாராட்டுக்குரியது.

கலாபூஷணம் க.ப.சின்னராசாவிடம் கற்ற மாணவன் பரமேஸ்வரன் கௌரீசன் சிறுவயதிலிருந்தே சகல கலை வகுப்புகளிலும் கற்று வருகிறார். சமய பிரசங்கத்திலும் மிருதங்க இசையிலும் சிறப்படைய ஆசான்களும் பெற்றோரும் ஊக்கமளிப்பது அவரைச் சிறப்பான கலைஞராக வர உதவியது.

29.01.2012 இல் மிருதங்க இசை அரங்கேற்றம் காணும் செல்வன் ப.கௌரீசன் இளந்தொண்டர் சபைக்கும் எம் மண்ணுக்கும் மேலும்பல சிறப்புகளையும் தேடித்தருவதால் இவரின் பெருமைகள் நன்கு பிரகாசிக்க எனது நல்வாழ்த்துக்களையும் கூறுவதுடன் முருகப்பெருமானின் திருவருளால் சிறந்த கலைஞராக முன்வர வேண்டுமெனவும் பிரார்த்திக் கிறேன்.

***"ஆடும் பரிவேல் அணிசேவலெனை***

***பாடும் பணியே பணியாய் அருள்வாய்"***

நன்றி.

மா.சடாச்சரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலைச் சேர்ந்த மிருதங்கமேதை மகாதேவன் கணேசதாசன் கனடாவிலிருந்து வழங்கிய வாழ்த்துச் செய்தி

யாழ் என்னும் இசைக்கருவியின் பெயராகவே யாழ்ப்பாணம் என்னும் பெயர் எம் மண்ணுக்குக் கிடைத்தது. இசைக்கலையால் மேம்பட்ட யாழ்ப்பாணத்தில் இணுவில் திருவூர் பல கலைகளுக்கும் சைவத்துக்கும் தமிழுக்கும் உறைவிடமாக அமைந்ததை யாவரும் அறிவர். இப்பாரம்பரிய கலைகளை வளர்க்கும் பாரிய பணியில் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை பணியாற்றுவது போற்றத்தக்கது.

இணுவிலில் பிறந்து இளந்தொண்டர் சபையில் மிருதங்கக் கலையை நன்கு கற்றுத் தேறினேன். எமதூரில் இசைக்கலைஞர்களுக்குப் போதிய மதிப்புக்கிடைப்பதில்லை. காலச் சூழலுக்கேற்ப நானும் புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கிறேன். சொந்தநாட்டில் கலைஞர்களுக்கு இல்லாத மதிப்பு வெளிநாடுகளில் சிறப்பாக அமைந்துள்ளது. இதனால் எனது மிருதங்க இசையை கனடாவில் போதித்து வருகின்றேன். பெற்றோரும் தமது பிள்ளைகளை அழைத்து வந்து இசையைக் கற்க ஊக்குவிக்கின்றனர். எனது விடாமுயற்சியால் இங்கு எண்பது மாணவர்களுக்கு மிருதங்க இசையைப் புகட்டி வருகிறேன். இங்கு பாரம்பரியத் தமிழ் இசையை யாவரும் பெருவிருப்புடன் ஏற்று வருகின்றனர்.

இதனால் எனக்கு மட்டுமல்ல எனக்கு மிருதங்க இசையை ஊட்டி வளர்த்த இளந்தொண்டர் சபைக்கும் எம் மண்ணுக்கும் பெருமை சேர்கிறது. இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையில் பலகலைகளையும் கற்றுவரும் பரமேஸ்வரன் கௌரீசன் என்பவர் (எனது உறவினர்) தமது பதின் மூன்றாம் வயதில் மிருதங்க இசை அரங்கேற்றம் காணுவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். அவரின் திறமையைப் பாராட்டுகிறேன். அவர் கலைகளில் சகல நுணுக்கங்களையும் கற்று சிறப்புடன் பிரகாசிக்க முருகப்பெருமானை வேண்டி வளமுடன் வாழ எனது உளமார்ந்த பாராட்டுக்கள்.

***என்றும் எமது மண்ணையும், கலைகளையும் நேசிக்கும்***

***மகாதேவன் கணேசதாசன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

**திருமதி. கந்தையா பரமேஸ்வரி**

**குடும்பத்தவர்களின் வாழ்த்துச்செய்தி**

**(சிவசக்திவேல் ஏந்திய கந்தப்பெருமானை வேண்டி**

**எங்கள் குடும்பத் தலைவர்**

**அமரர் சின்னத்தம்பி கந்தையாவையும் நினைவு கூர்ந்து)**



அந்தமிலா ஆதிசிவனது மூச்சே இசை ஆகும் என்பர் ஆன்றோர். சிவனின் ஆனந்த நடனத்தின் போது விஷ்ணு, பிரம்மா, சரஸ்வதி, நாரதர், பூதகணங்கள் யாவும் வாத்தியம் இசைக்க இறைவன் இசையை இயக்கி வைத்தான் என்பது ஆதி நூல்களின் கருத்து. இவ்வாறு நந்தியெம் பெருமானால் இறைவனின் இயக்கத்திற்கு வாசிக்கப்படுவது மிருதங்கம் எனும் வாத்திய மாகும்.

"இசை, ஆலயங்களின் மூலம்தான் வளர்த்தெடுத்து பரவலாக்க வேண்டும்" என்பது எமது சமய நியதி. இக்கருத்துக்கமைய இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை (சமய நிறுவனம்) தனது பணியைச் சிறக்க செயற்படுகின்றது. இங்கே பயிலும் எனது பேரன் ப.கௌரீசன் மிருதங்கக் கலையைக் கற்று இன்று அரங்கேற்றம் காண்கிறான்.

எனது தந்தையார் செல்லத்துரை, கோயிலில் பிள்ளையார் கதை, திருவெம்பாவை, கந்தபுராணம், தேவாரங்கள் இசையுடன் நித்தமும் சென்று பாடுவார். அவரது வழித்தோன்றலில் எனது பேரன் கௌரீசன் தந்தை பரமேஸ்வரனின் பெரும் முயற்சியில் பல கலைகளும் கற்று வருகிறார்.

இவரது அரங்கேற்றம் சிறக்கவும் கௌரீசன் பல்கலைகளும் திறம்படக் கற்று கல்வியிலும் சிறந்து நல்வாழ்வு வாழ எம் பெருமான் ஆசிகளை வேண்டி எனது பிள்ளைகள் சார்பிலும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கந்தையா பரமேஸ்வரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவிலைச் சேர்ந்த கந்தையா(அமரர்)வின் பிள்ளைகள் கனடாவிலிருந்து வழங்கும் வாழ்த்துக்கள்



எங்கள் குடும்ப உடன் பிறவியான பரமேஸ்வரன் வானதி தம்பதியினரின் தவப்புதல்வன் தமது சிறு வயதிலிருந்தே சமயநெறி பூண்டு பாடசாலைக் கல்வியுடன் இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபையில் இணைந்து கலைவகுப்புகளில் கற்று வருகிறார். இணுவில் கந்தப் பெருமானின் அருளாசியினால் தமது பதின்மூன்றாம் வயதில் மிருதங்க இசை அரங்கேற்றத்தை இன்று (29.01.2012) நிகழ்த்துகின்றார். இவரின் அன்னையின் உடன்பிறப்புகளான நாமனைவரும் கனடாவில் வாழ்ந்தாலும் இன்றைய நிகழ்வில் பங்குபற்றி பேரின்பத்தில் மகிழ்ச்சியடைகின்றோம். எங்கள் குலக் கொழுந்தான பரமேஸ்வரன் கௌரீசன் இன்று காணும் அரங்கேற்றம் சகல நற்பேறுகளையும் பெற எங்கள் அனைவரதும் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

மேலும் கௌரீசன் பல கலைகளையும் நற்கற்று மேலோங்கி எமது குலத்துக்கும் இணுவில் மண்ணுக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென இணுவில் கந்தப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு. திருமதி. சிவசுப்பிரமணியம் பகீரதி தம்பதியினர்.



**ஏனைய வாழ்த்தும் குடும்பத்தினர்,**

01. க. வசந்தன்
02. க. பகீரதன்
03. க. சிவதாசன்
04. சிவமதி
05. சுமதி
06. குகேந்தி



**எங்கள் அனைவரதும் அன்பான வாழ்த்துக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை உலகின் இமயத்தைத் தொட்டிடுவாய்





இணுவையம்பதியில் கந்தன் கருணையோடு இளந்தொண்டர் சபையில் நல்லாசான் க.ப.சின்னராசா அவர்களிடம் மிருதங்க வாத்தியத்தை முறையாகக் கற்றுத் தேர்ந்து அரங்கேற்றம் காணும் எமது அன்புப் பேரன் பரமேஸ்வரன் கௌரீசன் அவர்களை இசை உலகின் இமயத்தை எட்டிப் பார்போற்ற பல்லாண்டு காலம் வாழ்கவென வாஞ்சையுடன் வாழ்த்துகின்றோம்.

**திரு.திருமதி நவரத்தினம் கண்மணி தம்பதிகள்**

---

## வளம் பெறுவாய்

சீரிணுவைப் பதி போற்றும் கந்தவேளின் கருணை நிறை
பரமேஸ்வரன் திருத்தவத்தோன் கௌரீசன் - செம்மை சேர்
மிருதங்கக் கவின்கலையை துல்லியமாய்
ஞானகுரு சின்னராசா போதிக்க
கற்றின்று
ஆன்றோர் சபைதனில்
அரங்கேற்றும் நன்னாளில் - உலகோச்சும்
இசைஞனென உவப்புடனே
எந்நாளும் மிளிர்ந்திடவே
வாழ்த்துகிறோம்
வளம்பெறுவாய்



**திரு.திருமதி பாஸ்கரன் மாலினி**
**(சித்தப்பா – சித்தி)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாளமும் தண்ணுமையும்





பேராசிரியர். சபா.ஜெயராசா

தண்ணுமை என்பது மிருதங்கத்தைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். "தண்" என்ற இனிய ஓசையை எழுப்புவதால் அது தண்ணுமையாயிற்று. இயற்கையின் சலனங்களின் ஒலிகளை தோற்கருவிகள் வழியாக மீள உருவாக்கி இன்பம் காணல் தொன்மையான பண்பாடுகளிலே காணப்பட்டது. இயற்கையை பாவனை செய்வதால் அவற்றைத் தம்வசப்படுத்திக் கொள்ள முடியும் என்று தொல் குடியினர் கருதினர்.

தாளமும் தண்ணுமையும் காலம், வெளி ஆகியவற்றைக் கண்டறி வதற்குரிய தொன்மையான கல்வி முயற்சிகளாக அமைந்தன. காலக்கணக்கீட்டின் வழி கணித அறிவு வளர்ச்சியடைந்தது. காலத்தைக் கணித்தல் மனிதனின் உடல் உழைப்போடும் உற்பத்தி நிகழச்சிகளோடும் இணைந் திருந்தன. உழைப்பின் அலகுகளுக்கும் கால அளவுகளுக்கும் தொடர்புகள் காணப்பட்டன. அது "நேரம் பற்றிய உழைப்புக் கோட்பாடு" (LABOUR THEORY OF TIME) எனப்படும்.

அதனை அடியொற்றியே தாளமும் அதனை விளம்பும் தோற்கருவியாகிய தண்ணுமையும் தோற்றம் பெற்றன.

மனித உழைப்பின் உயிர் நிலைகள் தாளத்தின் உயிர் நிலைகளாகின. அவற்றின் விளக்கம் வருமாறு

1. உழைப்பின் காலம் தாளத்தின் **காலம்** ஆயிற்று.
2. உழைப்பின் உறுப்பு தாளத்தின் **அங்கம்** ஆயிற்று.
3. செய்தலே உழைப்பு ஆவதால் தாளத்தில் அது **கிரியை** ஆயிற்று.
4. உழைப்பின் தொடக்கம் தாளத்தில் **எடுப்பு** ஆயிற்று.
5. உழைப்பின் இனத்திலிருந்து தாளத்தின் **ஜாதி** உருவாக்கம் பெற்றது.
6. வகைநிலையான உழைப்பு தாளத்தில் **ஜதி**யை உருவாக்கியது.
7. தொன்மையான மனித உழைப்புச் செயற்பாடுகள் **லய**த்தோடு அமைந்தன.
8. உழைப்பின் சிறு சிறு அலகுகள் தாளத்தில் **களை**களாக இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. உழைப்பு வழிப்பட்டும் நெறிப்பட்டும் செல்லல் **மார்க்கம்** என்று தாளத் தில் வடிவமைக்கப்பட்டது.

10. உழைப்பு பரந்து விரிந்து செல்லல் தாளத்திலே **பிரஸ்தாரம்** எனப்படும்.

இவ்வாறாக உழைப்பின் பரிணா மங்களில் இருந்து தாளம் தோற்றம் பெற்றமையைத் "தாளம் பற்றிய உழைப்புக் கோட்பாடு" விளக்கும்.

தொன்மையான மனித உழைப்புச் செயற்பாட்டிலே ஏழு உறுப்புகள் சிறப்புப் பெற்றிருந்தன. கண், காது, மூக்கு, வாய், கை, கால், தோள் ஆகியவை உழைப்புடன் அதிக தொடர்புடைய உறுப்புகளாக இருந்தன. தொன்மையான சுமை தூக்கலிலே தோள் ஒரு முக்கியமான உறுப்பாக இருந்தது. மணிவாசகரும்,

"எங்கொங்கை நின்
அன்பர் அல்லார் தோள் சேரற்க"

என்று திருவெம்பாவையிலே பாடியருளியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக மனித உழைப்பை அடியொற்றி சப்த தாளங்கள் உருவாக்கம் பெற்றன. அவை துருவதாளம், மட்டிய தாளம், ரூபகதாளம், ஜம்பைதாளம், திரிபுடைதாளம், அடதாளம், ஏகதாளம் என்றவாறு விளக்கப்படும். ஒரே உழைப்புச் செயலை மாற்றமின்றித் தொடர்ச்சியாகச் செய்யும் செயற்பாட்டை (ROUTINE WORK) அடியொற்றி ஏக தாளம் உருவாக்கப்பட்டது.

தாளமே தண்ணுமைக்கு அடிப்படையாயிற்று. தண்ணுமை காணல் தாளம் காணல் என அழைக்கப்பட்டது. தாளம் தொடர்பான தொன்மையான பாடல் ஒன்று வருமாறு.

"தென்றல் வடிவும் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவும், மதன் வடிவும் – குன்றாத
வேயினிசை வடிவும், வேதவடிவு காணில்
ஆயதாளம் காணலாம்"

மனித உழைப்பின் முடிவிலி யாய்ச் செல்தல் போன்று தாளத்தின் வடிவமும் முதவிலியாய்ச் செல்லுதலால் தாளத்தின் முழுவடிவத்தையும் கண்டு கொள்ள முடியாத நிலையினை மேற் கூறிய செய்யுள் விளக்குகின்றது.

தாளத்துக்கு அழகியல் வடிவம் கொடுத்த தோற் கருவிகளுள் தண்ணுமை சிறப்பு வாய்ந்தது. தண்ணுமையின் வலப்புறத்தையும் இடப்புறத்தையும் உயர்வு நோக்கித் தலை என்று கூறும் மரபு தமிழில் நிலைபேறு கொண்டது. அதனை அடியொற்றி வலந்தலை, இடந்தலை என்ற பெயர்சூட்டல் இடம்பெற்றது. தண்ணுமையில் இடம்பெற்றுள்ள கட்புலனாகாத உட்கரைத்தட்டு மனித உழைப்பின் உள்ளார்ந்த வலுவைக் குறிப்பிடும் அழகிய ஓசையைப் பிறப்பிக்கும் ஆக்க வடிவமாயிற்று.

தண்ணுமை மத்தளம் ஆகியவை ஓரினக் கருவிகளாகும். பிற்காலத்தில் அவற்றின் எழுச்சியில் மிருதங்கம் என்ற பெயர் சூட்டப்பட்டது. தோற்கருவிகளின் இயல்புகளை அடியொற்றி ஒரு பண்பாட்டின் தொன்மையையும் இயல்பையும் விளக்க முடியுமென மானிடவியல் ஆய்வாளர் குறிப்பிடுவர்.

தமிழர்கள் மத்தியிலே பல விதமான தோற் கருவிகள் இருந்தமை பற்றிய செய்திகளைக் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை வாயிலாகக் கண்டு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேரிகைப் படகம் இடக்கை உடுக்கை
சீர்மிகுமத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குட முழாத்தக்கை கணப்பறை
தமருகம் தண்ணுமை தாவில் தடாரி
அந்தரி முழவொடு சந்திரவளையம்
மொந்தை முரசே கண்டு தூம்பு
நிசானம் துடுமை சிறுபறை அடக்கம்
ஆசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்கஉபாங்கம் துடிபெரும் பறையென
மிக்க நுலோர் விரித்துரைத்தனரே"

ஓசை வேறுபாடுகளையும் எடுத்தியம்பல் வேறுபாடுகளையும் மிக நுண்ணியதாக உற்றுநோக்கித் தமிழ் மரபிலே பல வகையான தோற்கருவிகள் உருவாக்கப்பட்டிருந்தமையை அடியார்க்கு நல்லாரின் உரையிலிருந்து கண்டறியக் கூடியதாகவுள்ளது. மிகவும் விரிவான தோற்கருவிப் பண்பாடு தமிழகத்தில் இடம்பெற்றிருந்தது.

ஆடலும் பாடலும் தாளத்தின் வழியாக நெறிப்படுத்தப்படுகின்றன. தாளம் ஆடலுக்கும் பாடலுக்குமுரிய அழகியலைக் கட்டுமானம் செய்கின்றது. தமிழ் மரபிலே ஆடல் இயற்றலியலின் (CHOREO GRAPHY) தளங்களாக அமைவன தாளமும் அதனை எடுத்தியம்பும் தண்ணுமையும் ஆடலின் கருப்பொருளும் அதனுடன் இணைந்த மனவெழுச்சியுமாகும்.

மேலைநாட்டு நடனங்களிலே குறிப்பிடப்படும் "ஆடல் தொடர்" (PHARASE) என்பதற்கும் பரத நாட்டியத்திலே குறிப்பிடப்படும் "கோர்வை" என்பதற்குமிடையே பல நிலைகளிலே ஒப்புமைகள் காணப்படுகின்றன. உடலசைவும் கால அளவும் ஆடல் தொடரிலே கருத்து வெளிப்பாட்டுக்கு ஏற்ப ஒருங்கிணைக்கப்படுகின்றன. அந்த ஒருங்கிணைப்புத் தண்ணுமையின் ஒலிப்பால் மீளவலியுறுத்தலுக்கும் (REINFORCEING) மெருகுபடுத்தலுக்கும் உள்ளாக்கப்படுகின்றது.

தமிழிசையிலே பருந்தும் நிழலுமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் சிறப்பார்ந்த இசைக்கருவி தண்ணுமையாகும். இசை உருப்படியின் இராகம், தாளம், சுருதி, மனவெழுச்சிக் கோலங்கள் என்ற அனைத்தோடும் ஒன்றிணைந்து தாளத்துக்கு மீள் அழுத்தங் கொடுக்கும் தண்ணுமை தமிழர்களாற் கண்டறியப்பட்ட உன்னதமான தோற்கருவியாகும்.

தமிழிசை மரபிலே தோற்றம் பெற்ற பிறிதொரு கருத்தமைவாக இருப்பது "வண்ணம்" ஆகும். மனிதரின் உடற்றொழிற்பாட்டின் **நேரெழல் ஒலிப்பாகவே** வண்ணங்கள் தோற்றம் பெற்றன. தொல்காப்பியத்திலே இருபது வகையான வண்ணங்கள் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

"வண்ணம் தானே
நாலைந் தென்ப" (தொல் – செய். 210)


பிற்காலத்திலே வண்ணங்கள் மேலும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. மேலும் வண்ணமும் சாந்தமும் ஒன்றென வலியுறுத்தப்பட்டது. திருஞானசம்பந்தரது தேவாரங்களிலே சந்த விருத்த அமைப்பைக் காணலாம். அருணகிரியார் அதனைமேலும் விரிவாக்கினார்.

தாளமும் வண்ணமும் ஒன்றிணைந்தவை. வண்ணந் தழுவிய தண்ணுமை என்பதும் வழக்கில் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் திருவூரும்
# வாழையடி வாழையாக வளரும் கலைஞர்களும்



களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்குதவும் அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன் தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்கும் சரக்கண்று காண்

வானுயர் கோபுரங்கள் அணி செய்யும் தெய்வ ஆலயங்கள் பொலிந்து காணும் சீரிணுவைத் திருவூரில் பக்திப் பரவசத்தால் அன்பர்களின் இதயக் கமலத்திலிருந்து ஊற்றெனப்பாயும் இசையருவியும் நாடகமாம் அசைவும் பணியும், எம்மவரின் கலை கலாசாரப் பண்பும் பார்போற்றும் சிறப்பாக அமைந் துள்ளன. இத்திருவூர் மக்கள் தமது அறவாழ்வில் பகுத்துண்டு பல்லுயிரோம் பும் அதியுயர் பக்திநெறியை அன்புடன் அனுசரிக்கின்றனர். இதனால் எம்மவர் திருவும், கல்வியும், கலையும் தழைத் தோங்கவும் இறையருளின் பேறாக எண்ணியே அயராது உழைத்து வாழவும் தம்மை இணைத்துள்ளனர். இவர்களின் புனிதமான வாழ்க்கை நெறியில் தீமை களற்ற நல்வாழ்வே மலர்கிறது.

அன்பகலாத தூயசிந்தனையில் அறம்போற்றும் ஆன்மிக சிந்தனையும் இறைவனை நாடும் நற்பணியில் இசை ஞானமும் வளர்கிறது. இயற்கையான செம்மனத்தில் திருவருளின் பேறாக இசைஞானமும் பிறர்க்குதவும் சமூக நோக்கும் உதயமாகிறது. தாம் கற்றகல்வி, கலை, ஒழுகிய சமய நெறியைத் தமது சமூகத்தைக் குறிப்பாக தமது சூழலை முன்னேற்ற முனைந்தனர். இறையருளின் சித்தியால் இப்பணி சிறப்படைந்தது.

சுற்றுச்சூழல் அமைவுக்கேற்ப இத்திருவூரில் முப்பெரும் பிரிவுகள் அமைந்துள்ளன. இதனை நோக்கினால் இணுவில் கிழக்கில் சிவகாமி அம்மன் கோயில் அமைந்த சூழலில் இணுவில் சைவத்திருநெறிக்கழகம் தமது சீரிய பணியாக ஆலயப் பணிகளை ஆற்றி வருகிறது. இணுவில் தெற்கில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயச் சூழலில் திருநெறிய தமிழ்மறைக்கழகம் ஆலயப் பணியாம் அறப்பணியில் இணைந்துள்ளது. இணுவில் மேற்கில் இணுவில் இளந்தொண்டர் சபையினர் இணுவில் கந்தப்பெருமானின் ஆலயப் பணிக்கென்றே தம்மை இணைத்தனர்.

இத்திருவூரில் குடிகொண்டுள்ள தெய்வங்களின் அருளாசியால் அமைந் துள்ள முப்பெரும் பிரிவிலுள்ள ஆலயப் பணியை ஏற்ற நிறுவனங்கள் நாற்பது வருடங்களாக இயங்கி வருகின்றன. சிவநெறியும், சமயப் பண்பும், நல்லொழுக் கமும் பேணுவதன் பேரில் மூன்று பிரிவிலும் பதினைந்து வருடங்களுக்கு முன் தனித்தனி அறநெறிப் பாடசாலை களை நிறுவி வளர்த்து வருகின்றனர். இந்த நிறுவனங்களை நிறுவியவர்களின் பிற்சந்ததியரே இன்று வாழையடி வாழை யாக வளர்ந்து அறநெறிக் கல்வி கற்று வருகின்றனர். அன்று தொட்டு இன்றுவரை அறப்பணி வளர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரிய அறப்பணி போற்றும் இணுவில் இளந்தொண்டர் சபையை நோக்கினால் திருமணமாகாத வாலிபர்களே இந்த அமைப்பின் நிர்வாக உறுப்பினராவார். இவர்கள் தமது தூயசிந்தனையும் உடல் வலிமையும் துணைநிற்க அன்று முதல் கந்தப்பெருமானின் ஆலயப் பணியாவற்றையும் தமது மறுவாழ்வின் விமோசனத்துக்காகவே சிரமதான மூலம் மேற்கொண்டனர். ஆலயமும் சுற்றுச் சூழலும் புனிதமடைந்தது. பெருவிழாக் காலங்களில் சுவாமி வீதியுலா வரும்போது தொண்டர் சபையின் இசைக்குழுவினர் தமது பாரம்பரிய துணை இசைக்கருவிகள் சகிதம் பண்ணிசை பாடி இன்புற்றனர். தமது பண்ணிசையும் இணைக்கருவிகளின் வாசிப்பும் இளஞ்சிறார்களிடையே பரவ வேண்டுமென்ற ஆவலினால் மாணவர்களுக்கான கலைப்பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்தனர். மாணவர்களும் அதி விருப்புடன் கலைவகுப்புகளில் இணைந்தனர்.

இளமையிற்கல்வி பசுமரத் தாணி போல நன்கு பதியும் என்பதால் பிஞ்சுப் பாலகர்களுக்கும் முன்பள்ளி மூலம் மூன்று வயதிலிருந்தே சமய அறிவு, நல்லொழுக்கம், நற்பண்பு, கல்வியில் ஆர்வம் போன்ற நற்போதனையை இனிது ஊட்டினர். இப்பிள்ளைகள் பள்ளிப் பருவத்தே பாடசாலைகளை நாடினாலும் சிவநெறி மற்றும் கலைவகுப்புகளிற் பயிலவும் ஆர்வங் கொண்டனர். பதினைந்து வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப்பாடசாலை மூலம் கலாசார சமய அறிவு, பண்ணிசை, தமிழ்மரபு, சைவத் தமிழ் மரபு கலை கலாசார நெறிகளையும் கற்று வருகின்றனர்.

இணுவில் இளந்தொண்டர் சபையின் கலைவகுப்புகளில் கர்நாடக இசை, பண்ணிசை, மிருதங்கம், வயலின், வீணை, ஹார்மோனிய இசை ஆகிய இசைத்துறையையும் நாடகக் கலையையும் நன்கு கற்றுச் சிறப்படைந்தனர். இதனால் சைவத் தமிழ்ப் பாரம்பரிய நெறிப்படி கற்றுத் தேறிய நுண்ணிறிவால் விசேட போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களையும் பாராட்டுகளையும் பெற்றனர். இதனால் மாவட்ட மாகாண தேசிய விருதுகளும் கிடைக்கப்பெற்றனர்.

இளந்தொண்டர் சபையினரின் சமய மற்றும் கலைவகுப்புகளில் விருதுகளை மேலும் பெற எண்ணிய பல மாணவர்கள் இங்கு தொடர்ந்து பயின்று தமது துறையில் அரங்கேற்றம் கண்டும் சிறப்படைந்தனர். இக்கலை வகுப்புகள் அவ்வத்துறையில் அதியுயர் ஆற்றல் மிக்க சான்றோர்களால் போதிக்கப்படுகின்றன. ஆற்றல் மிகுந்த இசை மற்றும் மிருதங்க வகுப்பு மாணவர்கள் அரங்கேற்றம் கண்டு உள்ளூரிலும் வெளி மாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் தமது திறமையால் பிரகாசிக்கின்றனர். இளந்தொண்டர் சபையின் மிருதங்க வகுப்புகள் புகழ் பெற்ற மிருதங்கப் பேராசான் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் நேரடிப் போதிப்பில் இதுவரை இருபது மாணர்வர்கள் தமது மிருதங்க இசைத் திறமையால் அரங்கேற்றங் கண்டுள்ளனர். வாழையடி வாழையாக இன்றும் பல மாணவர்கள் பலதுறைகளிலும் கற்று வருகின்றனர்.

இளந்தொண்டர் சபையின் ஆரம்ப கால ஸ்தாபக உறுப்பினர் ஐந்து பேரில், சமயநெறி, கலை விருத்திக்கு மாகத் தம்மை அர்ப்பணித்த இவ்வூர் மா.ந.பரமேஸ்வரன் அவர்கள் இன்றுவரை ஆர்வத்துடன் பணியாற்றுவதால் மாணவர்களின் கலைத் திறமைக்கும் தூண்டுதலாக அமைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசி வழங்கும் திருமுருக கிருபானந்தவாரியார்



நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் ஆறுமுகநாவலராக...



நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நாவலர் பட்டம் பெறும் நடிப்பின்போது (2011)



இராமகிருஷ்ணமிஷனில்...



இசையினில் இணைந்து



இன்றைய அரங்கில்...



செல்வச்சந்நிதியில் கதாப்பிரசங்கம் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தாம் கற்றுக் கொண்ட சமயம் மற்றும் கலையறிவால் பண்ணிசை, சமயப்பிரசங்கம், சமய நாடகம் போன்ற கலைத்துறை அனுபவத்தை வாழையடி வாழையாக இம்மண்ணின் சிறார்களையும் பிரகாசிக்க வைக்க முன்வந்துள்ளனர். இதனால் இவ்வூர் மற்றும் அயலூர் மாணவர்கள் கலைமற்றும் நாடக வகுப்புகளில் கற்று வருகின்றனர். இணுவில் திருவூர் அன்று தொட்டு முத்தமிழ் மற்றும் ஆயகலைகளில் சிறப்படைந்தமை யாவரும் அறிவர். இளந்தொண்டர் சபை தமது அனுபவ ஆற்றலினால் சிவநெறியையும் கலைகளையும் நன்கு வளர்த்து வருகின்றனர். இச்சபை மூலம் போற்றப்படும் இசை, நடனம், நாடகம் ஆகிய பாரம்பரிய கலைகள் இத்திருவூரின் உறைவிடமாக அமைந்துள்ளமை நொச்சியம்பதி முருகப் பெருமானின் பேரருளேயாகும்.

இளந்தொண்டர் சபையால் நடாத்தப்படும் சமய மற்றும் கலை வகுப்புகளில் ஆர்வமுடன் கற்க முன்வந்த பரமேஸ்வரன் கௌரீசன் என்பவர் தமது திறமையைக் காண்பிக்கிறார். சமயநெறி, பண்ணிசை, மற்றும் மிருதங்கம், வீணை, சமய நாடகங்கள், சமய இசைச்சொற்பொழிவு போன்ற பலதுறைகளிலும் சிறந்து விளங்குகிறார். கருவிலே உதயமான இவரது கலைஞானம் இவரது கலைச் சிறப்புக்கு உதவுகிறது. கருவில் உணர்ந்ததாலும் கற்ற கல்வியின் அறிவினாலும் தந்தை பரமேஸ்வரனின் வழிகாட்டலினாலும் வெகுசிறப்பாக மேடைகளை அலங்கரிக்கிறார்.

கலையார்வம் மிக்க கௌரீசன் ஒவ்வொருதுறைக்கும் அமைந்த நல்லாசான்களிடம் நற்கல்வி கற்றுத் தமது தந்தையின் நெறிப்படுத்தலினால் யாவரும் வியக்கும் வண்ணம் சிறப்படைந்துள்ளார். இவரின் ஒன்பதாம் வயதில் அடைந்த சிறப்பை அறிந்த தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலுள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டு பேரவையினர் தந்த அழைப்பை ஏற்று 14.12.2007 அன்று தமது கன்னிப் படைப்பான "திருஞான சம்பந்தர்" என்னும் இசைச் சொற்பொழிவை ஆரம்பித்தார். சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவை மண்டபத்தில் அணிசெய்த மிருதங்க ஹார்மோனிய கலைஞரின் உந்து சக்தியுடன் சொற்பொழிவு ஆரம்பமானது. கௌரீசன் தமக்கே உரியதான சைவப் பொலிவில் கழுத்தில் உருத்திராக்கமும் நெற்றியில் துலங்கும் வெண்ணீறும் வாயிற் புன்சிரிப்பும் கையில் சப்பளாக் கட்டையும் அணி செய்யத் தமது பிஞ்சுக் குரலில் கதையைத் தொடங்கினார். இப்பிரசங்கத்தில் சுத்தமான தமிழ் வசன நடையும் சந்தர்ப்பத்துக்கேற்ற திருஞான - சம்பந்தப் பெருமானின் தேவாரமும் கனீரென்ற குரலில் அமைந்தன. மேலும் தேவாரப் பாடலில் இராகம் மேவிய இனிய குரலும் பிசகாத தாள வரிசையும் சொல்லழகும் பேரவை மண்டபத்தில் நிறைந்திருந்த பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்ததும் தம்மையறியாமலே கைத்தாளம் போட்டு பிரசங்கத்தில் மூழ்கியிருந்தனர். இந்த நிகழ்வில் பாடிய அருள்பொழியும் ஆறு தேவாரங்களும் அனைவரையும் கவர்ந்தன. சபையில் அமர்ந்து பிரசங்கத்தை நன்கு சுவைத்த பேரவைத் தலைவர் தமது குறிப்புரையில் "திருஞானசம்பந்தரின் சொற்பொழிவை ஓர் இணுவில் திருஞான-சம்பந்தர் இங்கு வந்து பேசியும் பாடியும் எம்மையெல்லாம் பரவசப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மேலும் பல சொற்பொழிவை இந்த மண்டபத்தில் நிகழ்த்த வேண்டும். இவரின் கலை வளம் ஆற்றங்கரை வேலகனின் பேரருளால் பலசீரும் சிறப்பும் பெற்று எமது மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் சந்நிதி முருகப் பெருமானை வேண்டுகின்றோம்" என்று உளமார வாழ்த்தி ஆசீர்வதித்தார். கௌரீசன் அன்று பெற்ற அருளாளரின் ஆசீர்வாதத்தினால் பத்துக்கும் மேற்பட்ட பிரசங்க மேடைகளை அலங்கரிக்க உதவியது.

கௌரீசனின் கலைபயிலும் நெறி விரிவடைகிறது. இதன் பேறாக ஏற்கனவே கலை ஆர்வத்துடன் ஆரம்பித்த மிருதங்கப் பயிற்சிநெறி இன்று அரங்கேற்றங்காணும் மிருதங்க விற்பன்னராக அமைய இணுவைக் காஞ்சியம்பதியில் உறைந்த கந்தப் பெருமானின் பேரருளை நாட வைத்தது. இவரின் கைவந்த கலையான மிருதங்க இசை கேட்ட இணுவையம்பதி மாதா பூரிக்கிறாள்.

இவர் தாம் கற்ற ஏட்டுக்கல்வியுடன் தமது பதின்மூன்று வயதில் மிருதங்க இசை அரங்கேற்றம் காண்கிறார். மேலும் தாம் கற்ற பாடசாலைக் கல்வி கலைத்துறைகள் சார்பில் வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலும் விருதுகளை பெருமையுடன் பெற்றுள்ளார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற இளந்தொண்டர் சபை அறநெறிப்பாடசாலையின் சிறுவர் நாடகம் தேசிய விருதுகள் பெறவும் கௌரீசனின் வகிபாகம் சிறப்பாக அமைந்தது.

சென்ற 17.12.2011 அன்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆறுமுகநாவலர் குருபூசை விழாவில் இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப் பாடசாலை மாணர்வர்கள் நடித்த "ஆறுமுகநாவலர்" என்னும் நாடகத்தில் ஆறுமுகநாவலர் என்னும் கதாபாத்திரம் ஏற்ற கௌரீசனின் உடலமைப்பும் தோற்றமும் நடிப்பும் மிகச் சிறப்பாக அமைந்தது. மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் வியப்படைந்தனர். விசேட குறிப்புரை வழங்கிய பெரியார் "இன்றைய விழாவில் ஆறுமுகநாவலரே நேரில் வந்து சைவப்பிரசங்கத்தை நிகழ்த்தினார். கௌரீசனின் உடலமைப் பும் பேச்சு வன்மையும் குரலினிமையும் நாவலர் பெருமானின் சாயலாகவே அமைந்தன" எனப் பாராட்டினார்.

இன்றைய அரங்கேற்ற விழாவில் கௌரீசனை உள்ளன்போடு வாழ்த்தி ஆசீர்வதித்த குருவான பார்போற்றும் மிருதங்க விற்பன்னரும் மகா மேதையு மான கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள் எம் மண்ணுக்கு ஆற்றிய சேவையால் உயர்ந்தவர். இவரது இருபத் தோராவது மிருதங்க அரங்கேற்றம் இணுவில் இளந்தொண்டர்சபையில் வரலாற்றுச் சான்றினைப் பதித்துள்ளது. தொன்மையான பாரம்பரிய கலை கலாசார பதிவை மேற்கொள்ளும் சீரிணுவைத் திருவூரின் நொச்சியம்பதி முருகன் திருவுளப்படியே அமைந்தமை பெரும் பேறாகும்.

இயல்பான இசைக்கலை, இன்ப முகம், உளமார நேசிக்கும் அன்பகலாத பக்தர்களின் வேண்டுதலும் தமது திருவருளினால் யாவரையும் சிறப்புடன் வாழவைக்கும் இறையருளினால் இணுவையம்பதியில் இளந்தொண்டர் சபை சைவத்தமிழ் மற்றும் தூய கலைகளை வளர்க்கும் நிறைவான நற் பலன் வழங்கிய சிறப்பினால் **கலைஞான சுரபியான** செல்வன் ப.கௌரீசன் சிறப் படைந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஆயிரம் மகவைப் பெற்றென்னாவ தென்னம்மாமிக்க
தூய நல்லறிஞனான சுதன் ஒருவனையே பெற்றால்
தாயொடுதந்தை என்னதவமியற்றினரோவென
மாயிரு ஞாலம் போற்றும் மரபெலாம் தழைக்குமன்றோ”

தாம்பெற்ற திருவருட் சக்தியால் கௌரீசன் இன்றைய மிருதங்க அரங்கேற்றம் மூலம் சிறப்படைந்தபோது பெற்ற தாய் தந்தையர் அடைந்த பேருவகையிலும் மேலாக இணுவையம் பதிமாதா உணரும் பெருமையே சாலச்சிறப்பாக அமைந்துள்ளது.

கௌரீசனின் ஆர்வம் மிகு கலையுணர்வு எம்மண்ணில் வாழையடி வாழையாக வளர்ந்த நிகழ்வாகும்.

***இறையருளின் ஆசீர்வாதத்துடன் கற்ற பல்கலைகளிலும்***
***வற்றாத கலைஞனாம் “கலைஞான சுரபி” யாக***
***நீடூழி வாழி! இறையருள் போற்றும் உத்தமனாக***
***“வாழ்க வளமுடன்”***

**மூ.சிவலிங்கம்**
**சமயசமூகப் பணியாளர்.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு தரும் திருமுறைகள்





சுத்த சாட்குண்ணிய பரிபூரண பதியாகிய சிவபிரானது திருவருளைப் பெற்ற திருஞானசம்பந்த சுவாமிகள் முதலிய உண்மை நாயன்மாரால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றனவும், உடலுயிர் கண்ணருக்கனறி வொளி போற் பிறிவருமத்துவித மாகுஞ் சிறப்பினதாய் "வேதாந்தத் தெளிவாஞ் சைவ சிந்தாந்தத் திறத்தினைத்" தெரிவிப்பனவுமாகிய தேவாரம் முதற்றிருத்தொண்டர் புராணமிறுதியாயுள்ள திருப்பாக்களே திருமுறை யெனப்படும்.

இத்திருமுறைகள் பன்னிரு திருமுறை களாக வகுக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்த சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட தேவாரமாகிய முதன் மூன்று திருமுறைகளும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய பின் மூன்று திருமுறைகளும், சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரமாகிய ஏழாந்திருமுறையும், மாணிக்க வாசகசுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம், திருக்கோவை என்னும் இரண்டுமாகிய எட்டாந் திருமுறையும், திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப் பாவும், அவருட் சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டுமாகிய ஒன்பதாம் திருமுறையும், திருமூலர் அருளிச் செய்த திருமந்திரமாகிய பத்தாந் திருமுறையும், திருவாலவாயுடைய சிவபிரான் முதலாயினர் அருளிச் செய்த திருமுகப்பாசுர முதல் திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலையீறாம் நாற்பிரபந்தங்களுமாகிய பதினோராந்திருமுறையும், சேக்கிழார் நாயனார் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணமாகிய பன்னிரண்டாந் திருமுறையுமாம்.

தேவாரம், திருவாசகம், திருக்கோவை, திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரம் முதல் நாற்பான் பிரபந்தமென்றுமிவற்றை அபயகுல-சேகர சோழவரசர் பெருமான் வேண்டப் பொல்லாப் பிள்ளையார் அனுக்கிரகம் பெற்ற நம்பியாண்டார் நம்பி மந்திரங்கள் பதினொன்றாதல் பற்றி பதினொரு திருமுறை களாக வகுத்தருளினார். திருத்தொண்டர் புராணம், அநபாயசோழவரசர் பெருமான் காலத்திலே பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்தருளப்பட்டது. இவற்றைத் திருமுறை கண்ட புராணத்தாலும், திருத்தொண்டர் புராண வரலாற்றாலும் உணர முடியும்.

திருமுறைகள் முதலிலும் முடிவிலும் ஓங்காரத்தையுடைய ஆரிய வேதம் போல, ஓங்காரவாச்சியராகிய சிவபிரானே பரம் பொருள் என்பதனை உணர்த்துகிறது. ஓம் என்னும் பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓங்காரத்தைக் காயத்திரி மந்திரங்களின் முதற்கணிற்குஞ் சிறப்புடைய தகர மெய்யோடு சேர்த்துத் "தோடுடைய செவியன்" என முதற் திருமுறையின் முதலிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றெழுத்தாகிய மகரத்தை நின்ற தெங்கு நிலவியுலகெலாம் எனப் பன்னிரண்டாம் திருமுறையின் ஈற்றிலும் புணர்ந்து நிலவுவது சாலவும் பொருத்தப்பாடு உள்ளதாக விளங்குகின்றது.

ஆரிய வேதத்திற் பதி, பசு பாசங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டிருப்பது போல் திருமுறைகளின் கண்ணும் பதி, பசு, பாசங்களின் இலக்கணங்கள் கூறப்பட்டிருப்பதால் திருமுறைகள் வேத மந்திரங்களுக்கு இணையாக உள்ளன என்பது தெளிவாகின்றது. சிவபிரானுக்கு மந்திரந் தூல சரீரமும், ஆன்மா சூக்கும் சரீரமும் சக்தி அதி சூக்கும் சரீரமுமாக மெனச் சிவாகமங்கள் ஓதுதலால் அம்மந்திர சக்தி சொரூபமாகிய வேதங்களின் கண்ணும் அவற்றின் வேறாகாத திருமுறைகளின் கண்ணும் சிவபிரான் விஷேட சாந்தித்திய முற்றிருக்கிறார்.

இவ்வாறு நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்ட திருமுறைப் பாடல்கள் பக்திப்பரவசமாக பண்முறையுடன் பாடி இறைபதம் அடைந்தார்கள் என்பதை யாம் நன்கு அறிவோம். தேவாரத் திருமுறைகளை அருளிய மூவரும் 10300 பதிகள் பாடினார்கள் என்றும் இவர்கள் 103 பண்களிலும் திருப்பதிகங்களைப் பாடியிருக்க வேண்டும் - பாடியிருப்பார்கள் என்று கருதலாம். அவர்களுடைய திருப்பதிகங்களிலும் பழமைச் சிறப்பு மிக்க 103 தமிழ் பண்களும் பயின்று வந்திருக்கக் கூடும். மூவர் முதலிகளின் திருப்பதிகங்களில் சிதைந்தவை போகக் கிடைத்தனவற்றுள் மொத்தம் 24 தமிழ்ப் பண்கள் பயின்று வந்துள்ளன. பூந்துருத்தி நம்பி, காடநம்பி தம் திருவிசைப்பாடல்களை சாளரபாணி என்றும் பண்ணில் பாடியுள்ளார். சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும் தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்மூரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தை காந்தாரம், நட்டராகம், செவ்வழி, காந்தார பஞ்சமம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி, செந்துருத்தி, நட்டபாடை, சாளரபாணி ஆகிய பண்கள் வழக்கத்தில் இருந்தன. திருமுறைச் சான்றோர்கள் இப்பண்களில் தம் பாடல்களைப் பாடித் தமிழிசையையும் சிவ நெறியையும் வளர்த்துப் பெருமை கொண்டனர். திருஞான சம்மந்தருடன் இருந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பாடினி அம்மையார் வகுத்து வழங்கிய முறையில் இக்காலத்தில் பாடப் பெற்று வரும் தேவாரப் பண்களும் அவற்றிற்கான இக்கால இராகங்களும் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| பண் | தற்கால வழக்கத்திலுள்ள இராகம் |
|---|---|
| 1. பழம்பஞ்சுரம் (பகற்பண்) | சங்கராபரணம் |
| 2. இந்தளம் (பகற்பண்) | மாயாமாளவகௌளை |
| 3. புறநீர்மை (பகற்பண்) | பூபாளம் |
| 4. சீகாமரம் (இரவுப்பண்) | நாதநாமக்கிரியை |
| 5. செந்துருத்தி (பொதுப்பண்) | மத்தியமாவதி |
| 6. செவ்வழி (பொதுப்பண்) | எதுகுலகாம்போதி |
| 7. நட்டபாடை (பகற்பண்) | கம்பீரநாட்டை |
| 8. கௌசீகம் (பகற்பண்) | பைரவி |
| 9. பழந்தக்கஇராகம் (இரவுப்பண்) | சுத்தசாவேரி/ஆரபி |
| 10. குறிஞ்சி (பொதுப்பண்) | ஹரிகாம்போதி/ குறிஞ்சி |
| 11. அந்தாளிக்குறிஞ்சி (இரவுப்பண்) | சாமா |
| 12. மேகராகக் குறிஞ்சி (இரவுப்பண்) | நீலாம்பரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 13. காந்தார பஞ்சமம் (பகற்பண்) | கேதாரகௌளை |
| 14. பஞ்சமம் (பகற்பண்) | ஆகிரி |
| 15. வியாழக்குறிஞ்சி (இரவுப்பண்) | சௌராஷ்டிரம் |
| 16. தக்கராகம் ( பகற்பண்) | காம்போதி |
| 17. தக்கேசி (பகற்பண்) | காம்போதி |
| 18. காந்தாரம் (இரவுப்பண்) | நவரோஜ் |
| 19. கொல்லி (இரவுப்பண்) | நவரோஜ் |
| 20. கொல்லிக்கௌவாணம் (இரவுப்பண்) | நவரோஜ் |
| 21. பியந்தைக் காந்தாரம் (இரவுப்பண்) | நவரோஜ் |
| 22. நட்டராகம் (பகற்பண்) | பந்துவராளி |
| 23. சாதாரி (பகற்பண்) | பந்துவராளி |
| 24. யாழ்மூரிப்பண் | அடானா |

சம்பந்தர் மட்டும் யாழ் மூரிப் பண்ணில் (அடானா) பாடலை அருளிச் செய்துள்ளார். செந்துருத்திப் பண்ணில் (மத்தியமாவதி) சுந்தரர் மட்டும் பாடல்களை அருளிச் செய்துள்ளார். அப்பர் சுவாமிகள் கையாண்டுள்ள திருநேரிசை என்ற பகுதி கொல்லிப் பண்ணிலும் (நவரோஜ்) இராகத்திலும் திருத்தாண்டகம் என்ற பகுதி குறிஞ்சிப்பண் (ஹரிகாம்போதி) இராகத்திலும் திருக்குறுந்தொகை பூர்வீக கல்யாணி இராகத்திலும் திருவிருத்தங்கள் வெவ்வேறு இராகங்களிலும் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமுறைப் பாடல்களை எமது வாழ்க்கையில் நீராடி தூய ஆடை அணிந்து திருநீறு தரித்து தூய உள்ளன்போடு, பக்தியுடன் மனமுருகி பண்முறையில் பாடி இறைவனைத் தினமும் வழிபட்டு வந்தால் நிலையான பேரானந்தப் பேற்றை அடையலாம். இன்னும் நாயன் மார்கள் தமது தேவைகளை நிறைவேற்ற இறைவனை பண்ணுடன் பதிகங்களைப் பாடி தமது தேவைகளை இறையருளால் பெற்றார்கள் என்பதை அறிய முடிகின்றது. எனவே நாமும் எமது பூலோக வாழ்வில் எமது தேவைகளினை நிறை வேற்றிக் கொள்ள நாயன்மார்கள் காட்டிய வழியில் அவ்வவ் திருமுறைப் பதிகங்களை பண்முறையுடன் தூய நீராடி திருநீறு தரித்து பக்தியுடன் உள்ளன்போடு மனமுருகிப்பாடி இறையருளைப் பெற்று நிறைவாக வாழ்வ தோடு நிலையான பேரானந்த வாழ்வையும் அடைவோமாக. இதற்காக நாம் பாட வேண்டிய திருப்பதிகங்களின் அட்டவணை பின்வருமாறு.

| தேவைகள் | தேவைகள் நிறைவேற்றப் பாடவேண்டிய திருப்பதிகங்கள் |
|---|---|
| 1. தில்லைச் சிற்றம்பலவன் திருவருள் பெற | "கற்றாங்கு எரியோம்பிக் கலியைவாராமே" |
| 2. இம்மை மறுமை இன்பம் பெற | துஞ்சலும் துஞ்சல் இல்லாத போழ்திலும் |
| 3. திருமணம் விரைவில் கைகூடிவர | "அயில்ஆகும் அன்பு அதனால் புரம்மூன்று எய்து" |
| 4. விரும்பிய மணவாழ்வு அமைய | "சடையாய் எனுமால் சரநீ எனுமால்" |
| 5.இணைபிரியாத இல்லறம் சிறக்க | 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" |
| 6. உறுதியாக பிள்ளைப் பேறு வாய்க்க | "கண் காட்டும் நுதலாலும் கனல் காட்டும் கையாலும்" |
| 7. கருச்சிதையாது பிள்ளைபிறக்க | "குருகாம் வயிரமாம் கூறு நாளால்" |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 8. குடும்ப உறுப்பினர் கொடுமையில் இருந்து விடுபட | 'மானிலையோர் கூறுகந்தாய் மறை கொள்நாவர்" |
| 9. செல்வ வளம் பெற | 'இடரினும் தளரினும் எனதுறு நோய்" |
| 10. உணவும், உடையும் என்றும் பெற | "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" |
| 11. வாக்கு வன்மை பெற | 'பூசுவதும் வெண்ணீறு புண்பதுவும் பொங்கரவம்" |
| 12. நல்லோர் உறவு கைகூட | 'நிரைகழல் அரவம் சிலம்பொலியலம்பும்" |
| 13. நம்பிக்கை வெற்றி பெற | 'நீலமா மிடற்றால வாயினான்" |
| 14. அல்லல்கள் அகல | 'மீளா அடிமை உமக்கேயாளாய்" |
| 15. துயரங்கள் தவிடு பொடியாக | 'மறையுடையாய் தோலுடையாய்" |
| 16. துன்பமற்ற இன்பவாழ்வு அமைய | 'நாமார்க்கும் குடியல்லோம்" |
| 17. உடல் உறுப்புகள் உறுதி பெற | "தலையே நீ வணங்காய்" |
| 18. மறுமை இம்மை வினையகல | 'நத்தார் படை ஞானன்பசு ஏறிந்தனைக் கவிழ்வாய்" |
| 19. திருவருள் குற்றத்திலிருந்து விடுபட | "கூற்றாயினவாறு விலக்ககலீர்" |
| 20. கொடும் சுர நோய்கள் அகல | 'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" |
| 21. பில்லி, சூனியம், ஏவல், செயல் இழக்க | "அவ்வினைக்கிவ்வினை யாமென்று சொல்லும் |
| 22. வைவிடப்பட்ட நிலையில் வாழ்வு பெற | "துணிவளர் திங்கள் துலங்கி விளங்க" |
| 23. கண்கள் ஒளிபெற்று பார்வை சிறக்க | "ஆலந்தானுகந்து அமுது செய்தானை" |
| 24. நவக்கிரக தோஷம் நீங்க | 'வேயுறு தோளி பங்கன்" |
| 25. சனீஸ்வரன்அருள்பெற | 'போகமார்த்த பூண்முலையாள்" |
| 26. வஞ்சகர் வலையில் இருந்து விடுபட | 'மாசில் வீணையும் மாலை மதியமும்" |
| 27. பகைவர்கள் தண்டனை பெற | 'செய்யனே திருவாலவாய் மேவிய" |
| 28. முதலுக்கேற்ற இலாபம், உழைப்புக்கேற்ற ஊதியம் பெற | "வாசி தீரவே காசு நல்குவீர்" |
| 29. தடைகளைத் தகர்த்து முன்னேற | 'பண்ணின் நேர்மொழி யாமுமை பங்கரோ" |
| 30. ஈட்டிய செல்வம் என்றும் தமக்குதவிட | 'பொன்செய்த மேனியீர்" |
| 31. இனம்புரியாத அச்சத்திலிருந்து விடுபட | 'ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" |
| 32. தனிமைத் துயரத்திலிருந்து விடுபட்டுத் துணையுடன் கூட | 'பொடியார் மேனியனே புரிநூல் ஒரு பாற்பொருத்த" |
| 33. நீண்ட ஆயுள் பெற்று நீடு இனிது வாழ | 'மட்டுயர் தீர அன்றர் சித்தமாணியார்க்கண்டே யற்காய் |
| 34. அகால மரணம் ஏற்படாது வாழ்வு பெற | "ஒன்றுகொலாம் அவர் சிந்தையுயர்வரை |
| 35. முதுமை வாழ்வு அமைதியாக நடையிட | "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ" |
| 36. மேன்மை கொள் சைவநீதி தழைத்திட | "வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்" |

எனவே உலகியல் வாழ்வு சிறப் புறவும் பேரானந்தப் பெருவாழ்வை எமக்கு அளிக்கவல்ல திருமுறைகளைப் போற்றி பூசை செய்து அன்றாடம் காலை, மாலை உள்ளன்போடு பாராயணம் செய்து உலகியல் வாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்து அதனூடாக நிலையான பேரானந்த பேற்றைப் பெறுவோமாக.

***மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்***

**கலாபூஷணம், சங்கீத பூஷணம்,**
**பண்ணிசைவாளர், பண்ணிசைச் செல்வர்.**
**விஸ்வநாதன் சிவஞானசேகரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமை மிகு "இணையிலி" என்ற இணுவில் திருவூர்





ஈழமணித் திருநாடு எனச் சிறப்புப் பெறும்சிவபூமியின்தலையாய யாழ்மண்ணின் தூய மணித் திருவூர் இணுவையம்பதி. சைவமும் தமிழ்நெறியும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியும், இறையருள் நிறைந்த ஞானபூமியும் இணுவையூரே. கல்வியாலும், செல்வத்தாலும் குறைவில்லாத பெரும்பதி. அருள் பொழியும் திருக்கோவில்களையும், அறம் வளர்க்கும் அறநெறிப் பாடசாலை களையும், சன சமூக நிலையங்களையும், நூலகங்களையும் கொண்டு அழகோடு மிளிர்வது சீரிணுவைத் திருவூர்.

ஆன்மிகம் மிளிரும் இத்திருப்பதி யிலே பல சித்தர்கள், அருளாளர்கள், அறிவாளர்கள், கலைஞானிகள் வாழ்ந்து அருளாசிகளைத் தந்து எம்மண்ணினைப் பெருமைப்படுத்தியுள்ளனர். சிற்பங்கள், ஓவியங்கள் பல சமைத்த கலைஞர்கள், ஞான நூல்களைத் தெளிவாகக் கற்றுணர்ந்த பெரியோர்கள், முத்தமிழ் வல்லுனர்கள் என திருவூரை அலங்கரித்தவர்கள் பலர். இவ்வாறு கலை, கலாசார, பண்பாட்டு பாரம்பரியம் பல நிறைந்து சொல்லில் அடங்காத காவியமாக மிளிர்கின்றது இணுவையம்பதி.

17ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்து புனிதமண் அந்நிய தேசத்தவர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கள் வருகையால் நிலை தடுமாறியது. இவர்கள் இங்கே வந்து தமது மதங்களை, கொள்கைகளை வலுக் கட்டாயமாக மக்களிடம் திணிக்க முயன்ற போதும் தமது வாழ்வினுடைய ஆதார சுருதியான சைவ மரபினைப் பேணிக்காக்க இணுவை மக்கள் தவறவில்லை. இதன் பின் ஆங்கிலேயர் ஆட்சியில் சமய ஒழிப்புக் கடினமாகக் கையாளப்படாததால் சமய வழிபாடும் நெறிமுறைகளும் சீராகப் பின்பற்றப்பட்டன. இவ்வாறு அந்நியர்களின் கெடுபிடியிலிருந்து விடுபட்டுச் சிறப்புப் பெற்றமையும் இவ்வூரின் பெருமைக்குச் சான்றாகும்.

இணுவில் இணையில்லாத பெரும் பதி. கலைகள் நிரம்பிய திருப்பதி. அத்துடன் ஆன்மிகம் வளர்த்திடும், பக்தி மணம் கமழும் நற்பதி. "இணையிலி" என அழைக்கப்பெற்றது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதனைச் சிறப்பித்து இருபத்தொரு திருக் கோவில்களைத் தன்னகத்தே கொண்டது இணுவையம்பதி. ஊருக்குள் சிறந்த ஊர் இணுவையூர் என்ற வகையிலே அதிகாலை வேளையிலே இனிய நல்மணி யோசையுடன் தெய்வீக கீதங்கள் இவ் ஊரையே புனிதப் படுத்தும். இந்த புனிதத் தன்மை ஒவ்வொரு மனித உள்ளங்களையும் மகிழ்ச்சி, சுறுசுறுப்பு, பக்தி நெறியில் ஒருங்கிசைக்கும். உண்மை யிலேயே உடலில் உண்டாகும் வியாதி களையெல்லாம் தெய்வீக ஒலியினால் குணப்படுத்த முடியும். அனைத்து மனித உள்ளங்களையும் அமைதி அடையச் செய்யும். இதனை எண்ணியே "இசையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசமாகா இதயமேது" என தெய்வீக இசையொலி சிறப்பிக்கப்படுகிறது. இதேபோல இசையால் பயிர் வளரும் என்றும் பசுக்கள் அதிகளவில் பாலைக் கறக்கும் எனவும் அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இந்தச் சிறப்பு இணுவையின் சிறப்பம்சமாகிறது. இங்கே பயிர்கள் வளர்ச்சிக்கும், விவசாயத்துக்கும் பஞ்சமில்லை. ஆண்டவனின் திருமேனியைக் குளிர்ச்சிப்படுத்தும் பசுப்பாலுக்கும் பஞ்ச மில்லை. இவ்வாறு தெய்வீகப் பாடல்கள் திருவூரை சிறப்பிக்கும் அதேவேளை இசை யமுதை வழங்கிய இசை வல்லுநர்களையும் பாராட்டத் தவறவில்லை. புனித பூமியின் கலைஞர்களைப் பாராட்டியதுடன் எம் ஊரின் புனித்தத்துவம் உணர்ந்து நாடி வந்த இந்திய இசைக்கலைஞர்களையும் கௌரவித்த மண் இணுவை மண். இம் மண்ணின் சிறப்புக் கருதி வருகை தந்து இசைவிருந்து அளித்தவர்கள் பலர். திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியம்பிள்ளை, சேக்.சின்னமௌலானா, காரைக்குறிச்சி அருணாசலம், கிளாரினட் இசைவல்லுனரான ஏ.கே.சி.நடராசா, மதுரைச் சோமசுந்தரம், சீர்காழி கோவிந்தராஜன், பக்தி மணம் கமழும் பாடல்களை மனதை மயக்கும் இசையில் பாடவல்ல இசைக்கலைஞர் கே.பி.சுந்தராம்பாள், பித்துக்குளி முருகதாஸ் எனப் பல கலைஞர்கள் எம் ஊரை வந்து பாராட்டியவர்கள். ஆன்மீக இலக்கிய இசைப் பிரசங்கத்தை இனிய நயப்புடன் எம்மக்கள் மத்தியில் பிரசங்கம் செய்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களையும் இன்னும் எம் ஊர் நினைவு கூருகிறது.

அத்துடன் கல்வி ஒருவனை நல்ல பண்புடையவன் ஆகவும் அறிவாளியாகவும் ஆக்க வல்லது. மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுவது. இந்த எண்ணம் கொண்டே அன்று குருகுலக் கல்வியில் தொடங்கி இன்று அறநெறிப் பாடசாலைகள் மூலம் அறம் போதித்து மற்றும் கல்விக்கூடங்கள் மூலமும் கல்வி முதன்மைப்படுத்தப்படுகிறது. அன்று பிரம்மஸ்ரீ நடராச ஐயர் ஆறுமுகநாவலரிடம் கல்விப் போதனை பெற்றவர். தவத்திரு வடிவேற்சுவாமிகள் குருகுலக்கல்வி முறையில் கல்வி போதித்து அறிவாளிகளை அனுபவசாலிகளை இணுவைக்கு அளித்தவர். இன்று இணுவைக் கிராமத்தை கல்லூரிகள் மூன்று பெருமைப்படுத்துகின்றன. கல்வி மேம்பாட்டுச் சிறப்பிலும் சரி சமயப் பண்பாட்டிலும் சரி இன்றும் கல்லூரிகள் முன்நிற்கின்றன.

ஒருவன் படித்தால் மட்டும் போதாது. பண்புடையவனாக வேண்டும் எனக் கருதிய இணுவையின் கல்விச் சான்றோர்கள் ஆரம்பித்து வைத்தவை அறநெறிப் பாடசாலைகள். இந்த பாடசாலைகள் நல்லறிவு போதிக்கும் ஆசிரியர்களைக் கொண்டு சமூகத்தில் சிறுவர்களை சிந்தனை யாளர்களாக உருவாக்குகிறது. இது மட்டுமன்றி அறநெறிப் பாடசாலை மாணவர் களை சமய அறிவுப்போட்டி, சமயக் கருத் தரங்குகள், சமய நிகழ்ச்சிகள், இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறவும் தூண்டுகிறது. இணுவில் சைவத்திருநெறிக் கழகம், இணுவில் இளந்தொண்டர் சபை, திருநெறிய தமிழ்மறைக்கழகம் என இணுவையை அறம்போதிக்கும் கழகங்கள் சிறப்பைக் கொடுக்கின்றன.

இவ் அறநெறிப்பாடசாலைகள் சமய விழாக்கள், குருபூசைகள், கூட்டுப் பிரார்த்தனை, திருவாசகம் முற்றோதல் என சமயப் பண்பாட்டுப் பணிகளில் முன் நிற்கின்றன. இதில் இணுவில் இளந்தொண்டர் சபை கலைகளில் இருப்பிடமாகி பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், சிற்பமும் ஓவியமும், வயலின், வீணை, இசை நாடகங்கள், கூத்து, வில்லுப்பாட்டு, மேடை நாடகங்கள் என அன்று மட்டுமல்லாமல் இன்றும் பெருமையினைச் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்னும் கூற்றினைத் தாங்கி சமய கலாசார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு வளர்ச்சிக்கு மதிப்பை அளிக் கின்றன. மாணவர்களுக்கு கலைகளைப் போதித்து கலைஞர்களை உருவாக்க வழிமேல் விழி வைத்தும் காத்திருக்கின்றன. சிறந்த கலைஞர்களை உருவாக்கி அரங்கேற்றங் களைச் செய்கின்றன. இதன் பலனாய் தேசிய சிறுவர் நாடக விழாவிலே இளந்தொண்டர் சபை மாணவர்கள் தேசிய விருதினைப் பெறவும் வழிவகுத்தது. இவ்வாறு இணுவை மண்ணின் பெருமைக்கு அறநெறிப் பாடசாலை களும் பெரும் பங்காற்றுகின்றன.

ஓர் ஊரின் சிறப்பில் பழமையை நினைவு கூருவதும் பெருமையே. இதன் வழி இணுவையைப் புனிதப்படுத்திய சித்தர்களான இணுவில் பெரிய சந்நியாசியார், அம்பலவாண சுவாமியார், தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள், இணுவில் சின்னத்தம்பிப்புலவர், அன்னை அருள் வாக்குத் தரும் சாத்திரம்மா மற்றும் ஆறுமுகம் சந்நியாசியார், வேலாயுதர் சந்நியாசியார், தியாகராசா சாமியார், சண்முகம் சுவாமியார் எனப் பல இறை யருளாளர்களை, பெரியோர்களை என்றும் ஒவ்வொரு தலைமுறைக்கும் இவர்களின் தொண்டு, பணி, இறைவாக்குகள், செயல் களைச் சிறந்த நூல் உருவாக்கம் மூலம் நினைவு கூருகின்றது. "இணையிலி" என வழங்கிய இணுவை மண்ணில் இன்றும் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் இவர்களை நினைவுபடுத்தும் நூல்கள் சிறப்பளிக்கின்றன.

"உனக்கு வரம் தருவதற்காக யாரோ இருந்த தவமல்லவா நூல்கள் எனும் அரிய பொக்கிசங்கள்" எனும் மேன்மை பெற்ற பல அறிவுசார் நூலகங்களைத் தன்னகத்தே கொண்டும் இணுவை பல ஆர்வலர்களை வாசகர்களைத் தினம் தினம் அறிவைத் தேடி நாட வைக்கிறது. இதன் வரிசையில் வளர்ந்து வரும் நிறுவனமாக நூலகங்கள் அமைகின்றன.

இவ்வாறு இணையில்லாத திருப்பதி யாகிய இணுவையிலே பல்கலைகள் நிரம்பிய கலைஞர்களைக் கொண்டு, அறிஞர்கள், பெரியோர்கள், கல்வியாளர்கள், எண்ணற்ற ரசிகர்கள் எனப் பலரைக் கொண்டு, பலதுறையில் வல்லவரை, மேதைகளை, திருத்தொண்டர்களை அடக்கி இயற்கை வளமோடு பெருமையுடன் கௌரவத் துடன் மிளிர்கிறது இணையிலி எனும் இணுவையம்பதி.

"தர்மத்தைக் காத்தவனை அது காக்கும்" என்கிறது இந்து தர்ம சாஸ்திரம். அறம், பக்தி, அருள் நிறைவோடு விளங்கும் இணுவை என்றும் பெருமை மிகு இணை யில்லாத திருவூராகவே விளங்குகிறது. பெருமைமிகு இத்திருவூரில் சைவநெறி துலங்கக் கலைகள் பிரகாசிக்க இளஞ் சிறார்கள் தாம் பெற்ற அறிவு மூலம் சிறந்த கலைஞானம் பெற்றவர்களாகத் திகழ வைக்கும் பெருமை இணுவில் கந்தசுவாமி கோயில் பணி ஏற்ற பெருமை இளந் தொண்டர் சபைக்கு உண்டு. இங்கிருந்து கலைகள் பயின்று உள்ளூரில் மட்டுமல்ல பாரெல்லாம் பரந்து வாழும் இணுவையூர் கலைஞர்கள் தம் கலை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நாற்பது வருடங்களாக இயங்கிவரும் இளந்தொண்டர் சபையின் கலை வகுப்புக்களிற் கற்ற அநேகர் தம் புகழை ஈட்டியுள்ளனர். இதே வரிசையில் பரமேஸ்வரன் கௌரீசன் என்பவர் இறையருளினாலும் பெற்றோரின் வழி காட்டலினாலும் பண்ணிசை, சங்கீதம், மிருதங்கம், வீணை போன்ற பல பாடங் களிலும் நாடகப் பயிற்சியிலும் சிறந்து விளங்குகிறார். இவரை நெறிப்படுத்தும் நல்லாசான்களின் போதனை மிகச் சிறப்பானது.

சிறுவயது முதல் தான் கற்ற அறிவும் தந்தையின் வழிகாட்டலும் உந்தியதால் தனது கன்னிப் படைப்பான சைவப் பிரசங்கத்தைத் தமது ஒன்பதாம் வயதில் செல்வச்– சந்நிதியானுக்குக் காணிக்கையாக்கினார். எமது ஊரின் பண்புக்கேற்ற பிரசங்கம் மட்டுமன்றி நடிப்பும் இவரது கைவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலையாகும். இதனால் பிரசங்கம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகளுக்காகப் பல மேடைகளைச் சிறப்பித்துள்ளார்.

இவர் இளந்தொண்டர் சபையில் பெற்ற மிருதங்கக் கலைஞானத்தால் தமது திறமையுடன் இன்று (29-01-2012) மிருதங்க அரங்கேற்றஞ் செய்கிறார். இவ்வரிய கலைஞானத்தையும் சிறந்த கல்வியையும், சமய பக்தியையும் நெறிப்படுத்தும் எமது திருவூரான "இணையிலி" இன்றும் பார் போற்றும் பேறு பெற்றுள்ளது.

பாட்டன் பாட்டிகள் சைவம் காத்த வழியில் இன்று பாலர் பிரிவினரும் வயது வேறுபாடின்றி ஆர்வத்துடன் விளங்கும் இத்திருவூரில் சீரும் கல்வியும் சிவநெறியும் பொலிந்தமை திருவருளேயாகும்.

*"மேன்மை கொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்"*

**செல்வி சிந்து சிவபாலன்,**
**யாழ் பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவு.**



## இன்றைய இசையரங்கில்...

| உருப்படிகள் | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|
| 1. வர்ணம் | இராகமாலிகை | ஆதி | பட்டணம் சுப்ரமண்யையர் |
| 2. தத்வமறிய | ரீதிகௌளை | ஆதி | பாபநாதசிவன் |
| 3. வாஞ்சதோனுளை | கருணாரஞ்சனி | ஆதி (திஸ்ரநடை) | முத்தைய பாகவதர் |
| 4. ஆடிமோடி | சாருகேசி | ஆதி | தியாகராஜர் |
| 5. அந்தரங்கபக்தி | ஷட்விதமார்கின் | ஆதி | கோடீஸ்வர ஐயர் |
| 6. இராகம்தானம்பல்லவி | சந்ரகௌன்ஸ் | ஆதி | க.ப.சின்னராசா |
| 7. வேலனே | பெஹாக் | மிஸ்ரசாபு | நீலாராமமூர்த்தி |
| 8. கண்டுநீ | சிந்துபைரவி | ஆதி | கிருஷ்ணையா |
| 9. தில்லானா | சதாகல்யாணி | ஆதி | தவமைந்தன் |
| 10. திருப்புகழ் | தவியாவந்தி | மிஸ்ரசாபு | அருணகிரிநாதர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இசையால் வசமாகாத இதயம் எது?"



இசை என்பது இணுவை மண்ணின் பாரம்பரிய சொத்து என்பது உலகறிந்த உண்மை ஆகும். இசையால் வசமாகாத இதயங்கள் எதுவுமே இருக்க முடியாது. இறைவன் கூட இசைக்கு அடிமையானவன் என்பது புராண வரலாறுகள் கூறும் உண்மை. நாயன்மார்களில் இருந்து பாவலர்கள் வரை பாடிய தேவாரத் திருமுறைகள், தோத்திரப்பாடல்கள், கவிதைகள் கூட தாளலயத்துடன் பாடப்படும்போது தான் முழுமையடைந்தன. இவற்றுக்கு இராகங்கள் அதற்குரிய தாளங்கள், பண்கள் குறிப்பிடப் படுவது இதற்கு சான்றாகும். பாடலோடு தாளம் இணைவது பாலோடு சுவை சேர்ந்தது போன்ற பிரிக்க முடியாத ஒரு சொத்து.

கல்வி என்ற மிகப்பெரிய விருட்சத்தின் கிளைகளில் முக்கியமான கிளை இசைத்துறை ஆகும். இது பல கல்விமான்கள் உணராது இருக்கின்ற ஒரு உண்மை. எவ்வளவுதான் படித்துப் பட்டம் பெற்றாலும் பெரிய பதவிகளில் அமர்ந்தாலும் அவரது கல்வி வாழ்க்கை முழுமையடைந்ததாகக் கூற முடியாது. அது முழுமை பெறுவதற்கு இசைக்கலையில் ஒரு துறையிலாவது தேர்ச்சி பெறுதல் அவசியம். பல்வேறு துறைகளில் இருக்கும் பல அறிஞர்கள் மிருதங்க வித்துவான்களாகவும், புல்லாங்குழல், வயலின், ஆர்மோனியம் போன்ற பல்துறை இசைக்கருவிகளை இசைக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் வைத்திய கலாநிதிகள், கணிதத்துறை சார்ந்தவர்கள் கூட அடங்குகிறார்கள். "ஆயகலைகள் அறுபத்து நான்கு" இந்த கலைகளுள் இசைக்கலையும் ஒன்று. இணுவை மண்ணிலே பல இசைக் குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்றது. தவில், நாதஸ்வரக் கலைஞர்கள், கவிஞர்கள், பாவலர்கள், நடனக்கலைஞர்கள், சித்தர்கள், மருத்துவர்கள் எனப் பலரும் ஒருங்கிணைந்து வாழ்ந்த மண். இந்த வகையில் இசைப்பாரம்பரியம் இன்றும் கட்டிக்காத்து வரப்படுவது மகிழ்ச்சிக்குரியது. இந்த வகையில் பரமேஸ்வரன் அவர்களின் குடும்பம் முக்கியமானதொன்றாகும் என்றால் மிகையாகாததாகும். "தந்தை எவ்வழி மகிந்தனும் அவ்வழி" என்பது போல் அவரது பிள்ளைகளும் இசைத்துறையில் மிளிர்ந்து வருவது யாவரும் அறிந்த உண்மை.

பரமேஸ்வரன் அவர்கள் பல நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் என்பவற்றை அகில இலங்கை ரீதியாக மேடையேற்றி விருதுகளைப் பெற்றவர். அவரது நெறியாள்கையில் இன்னும் பல நாடகங்கள் மேடையேற்றப்படுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் அவரது இளைய புதல்வன் கௌரீசனின் மிருதங்கக் கலை அரங்கேற்றம் பெறுவது பெருமைக்குரியது. சிறு வயதிலேயே இசைத்துறையில் அவரது ஈடுபாடு சங்கீத ஞானத்தை வேரூன்றச் செய்தது. இணுவைக் கந்தனின் புகழ்பாடுவது இவர்களது பரம்பரைப் பணி. இளந்தொண்டர் சபையின் சைவப்பணிமனை குலம் ஆரம் பிக்கும் இவ் இசைத்துறை எத்தனையோ இசைக் கலைஞர்களை இசைத்துறை ஆசிரியர்களை விரிவுரையாளர்களை உருவாக்கியுள்ளது. இந்தவகையில்தான் கௌரீசனும் ஒரு மிருதங்கக் கலைஞனாக அரங்கேற்றம் பெற இருக்கிறார். இந்தச் சிறுவனின் இசைத்துறை ஆர்வம் இன்று தொலைக்காட்சி, கணினி போன்றவற்றில் சீரழிந்து செல்லும் எழிய சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

இவ்வண்ணம்,

**அன்புடன்,**

**ஆசிரியர். இரா. அருட்செல்வம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சார்ய தேவோ பவ



"குரு ப்ரஹ்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேஷ்வரஹ
குருர் ஸாக்ஷாத் பரப்ரஹ்மா தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ"

குருவின் சிறப்பினை தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது இம்மந்திரம். "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்றனர் ஆன்றோர். எம்மீது அளவிடமுடியாத பாசத்தைக் கொண்ட தாய், தந்தையருக்கு அடுத்ததாக நாம் குருவையே பணிதல் வேண்டும் என்பதே இதன் விளக்கமாகும்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றுங் கூடக் கூறுவார்கள். எமக்கு எண்ணும், எழுத்தும், கலைகளும் கற்பித்த ஆசான் என்றுமே எமக்கு இறைவனைப் போன்றவர். இறைவனை நாம் கண்களாற் காண முடியாது. நாம் எந்நேரமும் பார்க்கக் கூடியவராகவும், தூய மனத்துடையவராகவும், ஞானமுடையவராகவும், எந்நேரமும் எம் உயர்ச்சி பற்றியே சிந்திப்பவராகவும் உள்ளவர் குரு. அப்படிப்பட்ட ஒரு குரு எமக்கு அமைந்து விட்டால் இறைவனிடம் இருந்து எமக்கு கிடைப்பது குரு மூலம் கிடைத்துவிடுகின்றது. எனவே இறைவன் மீது செலுத்தும் பக்தியை குரு மீதும் செலுத்து என்பதை எமக்கு கூற எம் முன்னோர்கள் கையாண்ட வழியே இது.

இந்த உலகமே இறைவன் திருவடி பற்றி உள்ளமை யாமறிந்த விடயம். இறைவனிடத்தில் இருக்கின்ற அனைத்து உத்தம குணங்களும் குருவிடம் உண்டு. இறைவன் தூய்மையானவர். எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், அந்த இறைவனை எம்மாற் காண முடியாது. எனவே இறைவன் வடிவாக உள்ள குருவின் பாதார விந்தங்களைப் பற்றினால் இறை வழிபாட்டின் மூலம் கிடைக்கும் அனைத்து அனுகூலங்களும் எம்மை வந்தடைகின்றது. எம்மிடையே குருபக்தி இருக்க வேண்டும். ஆனால் நாம் தெய்வத்தை மறக்கக் கூடாது. ஏனெனில் அந்தக் குருவையும் எம்மையும் இணைத்து வைப்பவனே அந்த இறைவனாவான். தெய்வ அனுக்கிரகம் எமக்கு இல்லாவிட்டால் நாம் எப்படி நல்ல குருவைப் பெறுவது? அது முடியாத விடயம்.

"துர்லபம் த்ரயமேவைத் தேவானுக்ரஹ ஹேதுகம்
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ச்ரய"

தெய்வ அனுக்கிரகத்தினால் மனிதனுக்கு கிடைக்கின்ற முக்கியமானவை மூன்று உள. ஒன்று மனிதப்பிறவி, இரண்டாவது சத்தியத்தை அறிந்து கொள்ளல். அடுத்து சிறந்த குரு ஒருவர் கிடைப்பது ஆகும். அந்தக் குருவுக்கு குரு அவருக்கு குரு என நாம் எண்ணிப் பார்த்தால் இறுதியில் இறைவனே அனைவருக்கும் குரு ஆவான். எனவே தான் பரம்பொருளாகிய குரு எமது குருவின் வடிவில் வந்து எமக்கு உபதேசிக்கின்றான். காலத்தால் கட்டுப்படாத ஈசனே அனைவருக்கும் குரு. எனவே குருவின் மீது நாம் வைக்கும் பக்தி இறைவன் மீது வைக்கும் பக்திக்கு ஒப்பாகையால் தெய்வ அனுக்கிரகம் எமக்கு தாமாகவே வந்து சேரும்.

குருவைவிட மேலானவர் இல்லை. குருவிடம் நாம் பூரண நம்பிக்கை வைக்க வேண்டும். அது உண்மையான நம்பிக்கையாக இருக்க வேண்டும். குருவின் மீது நாம் வைக்கும் பக்தி எம்மை முத்தி நிலைக்கு இட்டுச் செல்லும் நாம் சிவநிந்தை புரிந்தால் இறைவன் நம்மை மன்னிக்கத் தேவையில்லை. குரு எம்மை மன்னித்து விட்டால் அந்த இறைவன் சினம் தணிந்துவிடும். ஆனால் குரு நிந்தை புரிந்த பின்னர் இறைவனிடம் சென்று மன்றாடினாலும் ஏழேழு ஜென்மத்துக்கும் அப்பாவம் எம்மைத் தொடரும்.

குரு பத்தியானது மிகவும் விஷேசமானது. நல்ல குருநாதர் நமக்குக் கிடைக்கவில்லையென்றாலும் எமக்குக் கிடைக்கும் குருவின் மூலம் நாம் உச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை அடைய வேண்டும். நாம் அனைத்திற்கும் ஆசைப்படுகின்றோம், சஞ்சலப்படுகின்றோம், மனதை உறுதியாக வைத்திருக்க முடியாதவர்களாக உள்ளோம். நாம் எப்போதும் தூய்மையாக ஞானம் நிறைந்த இறைவனை நினைத்தால் அதே நிலையை நாமும் அடையலாம். ஒரு குருவை நாம் இந்த நிலையில் வைத்து நோக்கினால் எம் ஆன்மா பிரகாசிக்கும். உண்மையான ஆனந்த நிலை விளங்கும். எம் மனம் பக்குவப்படும். இதற்குக் குருபக்தியும் இறைபக்தியும் எமக்கு அவசியம்.

எம் இந்து மதத்தின் ஆதி குருவாக தட்ஷிணாமூர்த்தி காணப்படுகிறார். "கு" என்றால் அஞ்ஞானம். "ரு" என்றால் களைபவர். அஞ்ஞானமாகிய இருளைக் களைபவரே குரு. குரு சேவையில் மெச்சும் செயலாற்றிப் புகழ் பெற்றவர்களில் ஆதிசங்கரரது சீடனாகிய பத்மபாதர் அடுத்த படியாக சமர்த்த இராமதாஸருடைய சீடர் கல்யாண் போன்றோரைக் கூற முடியும்.

பத்மபாதருடைய கதையை நோக்கினால் ஒரு நாள் இவர் ஆற்றின் அக்கரையில் இருந்து துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தார். இக்கரையில் இருந்து ஆதிசங்கரர் அவரை அழைத்ததும் சற்றும் தாமதியாமல் ஆற்றிலே இறங்கி நடக்கத் தொடங்கினார். அவர் உள்ளத்தில் குரு அழைக்கிறாரே என்ற ஒரே ஒரு எண்ணம் மட்டுந்தான் தோன்றியது. அவர் ஆற்றில் ஓடிய நீரைப் பற்றிக் கவலையுறவில்லை. அவர் ஆற்றில் வைத்த ஒவ்வொரு அடிக்கும் கீழே தாமரை மலர்கள் தோன்றி அவரைத் தாங்கிச் சென்றன. இதனாலேயே இவர் பத்மபாதர் என்று பெயர் பெற்றார். (பத்மம்-தாமரை)

அடுத்து கல்யாண் என்பவரை எடுத்து நோக்கினால் ஒரு நாள் சமர்த்த இராமதாஸர் தன் சீடர்களுடன் ஒரு மலையிலே ஏறிக் கொண்டிருந்தார். ஏறுகையில் இராமதாஸருடைய தோளில் இருந்த சால்வை கீழே பறந்து போனது. இராமதாஸருடைய பார்வையை மட்டுமே புரிந்து கொண்டு கீழேயிருந்த பள்ளத் தாக்கைக் கூடப்பொருட் படுத்தாமல் உடனே கீழே பாய்ந்து சால்வையைக் கைப்பற்றினார் கல்யாண். எல்லோரும் பயந்து போய் கல்யாண் இறந்து விட்டார் என முடிவு செய்து மலையிலிருந்து இறங்கிக் கீழே திரும்பி வந்து கொண்டிருந்தனர். அங்கே கல்யாண் சால்வையுடன் உடலில் சிறு காயங்கூட ஏற்படாமல் வந்து கொண்டிருந் தார். குருமேற் கொண்ட பக்தி அவரைக் காப்பாற்றியது.

மேற்கூறிய இரண்டு கதைகளின் மூலம் குருபக்தியைச் சிறப்பாக கடைப் பிடிப்போரடையும் சிறப்பையறியலாம். இச் சிறப்பம்சத்தினையே குருவின் அனுக்கிரகத் தால் ஞானம் கிடைக்கும் என சாந்தோக்கிய உபநிடதத்தில் "ஆசார்யவான புருஷோ வேத" எனக்கூறப்பட்டுள்ளது. ஆசாரியானைப் பெற்றவன் ஞானத்தை அடைகிறான் என்பது அதன் பொருளாகும். கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒருவன் பாலைவனத்தில் விடப்பட்டால் அவன் தன் இலக்கை அடைய முடியாது. பின் ஒருவன் வந்து தன் கட்டை அவிழ்த்து போகும் வழியைக் கூறின் அவன் இலகுவாக தன் இலக்கை அடைவான். இது போலவே குருவின் உபதேசத்தால் நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு போய்ச்சேர முடியும் என சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப் பட்டுள்ளது.

எமது ஆன்மா பிரம்மத்தோடு ஐக்கியப்படும் அதற்கு வழிகாட்டுவது குரு. இதனாலேயே அனைத்து சமயங்களிலும் குருபக்தி சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஸத் வித்வான் உபஸ்ருப்யதாம்
ப்ரதிதினம் தத்பாதுகா ஸேவ்யதாம்
ப்ரஹ் மைகாக்ஷரம் அர்த்யதாம்
ச்ருதி சிரோவாக்யம் ஸமாகர்ண்யதாம்

சத்தான, வித்தான குருவை வரிந்து கொள். தினமும் அவருக்கு பாத பூஜை செய். அவரிடமிருந்து உபதேசம், பிரணவ உபதேசம், உபநிடத மஹா வாக்கிய உபதேசம் எல்லாம் வாங்கிக் கொள்வாயாக என்பதே இதன் பொருளாகும். எனவே நாம் குரு பக்தியிற் சிறந்து எல்லாம் வல்ல பரம்பொருளை மகிழ்வித்து அவன் திருவடி எய்துவோமாக.

கலாவித்தகர்,

**செல்வி. ம. மயூரி,**

**(உதவி விரிவுரையாளர், நுண்கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக் கலைஞர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா

"தக்கார் தகவிலார் என்பது அவரவர், எச்சத்தால் காணப்படும்" என்பது வள்ளுவம். இக்குறளானது ஆசிரியத்துறையினரிற்கும் சாலவே பொருந்தும். சில ஆசிரியர்கள் காண்பவரை எல்லாம் தமது மாணவர் என்று தம்மைத் தாமே மனதாரப் புகழுவர். ஆனால் சில ஆசிரியர்களோ மிகவும் அமைதியாகவும் தன்னடக்கத்தோடும் தமது பணியைச் செவ்வனே ஆற்றுவர். இவ்வாறானவர்களிற்கு மாணவ பரம்பரையோ மிக நீண்டதாகவும் ஆழுமை கொண்டதாகவும் இருக்கும். இவ்வாறு பல நூற்றுக்கணக்கான மாணவர்களை மிருதங்கத் துறையில் உருவாக்கி ஐம்பது ஆண்டுகளிற்கும் மேலாக ஈழத்தின் மிருதங்கக் கலைவரலாற்றில் தடம்பதித்து கனிவான கலைஞனாய் இனிதான மனிதனாய் இன்றுவரை கலைப்பணியாற்றி வருபவர் சங்கீதரத்தினம் க.ப.சின்னராசா அவர்கள். கடந்த எண்பது ஆண்டுகளாக ஈழத்தில் ஒப்பற்ற கலைப்பணியாற்றிவரும் வட இலங்கைச் சங்கீத சபையின் மிருதங்கத் துறையில் "கலாவித்தகர்" பட்டம்பெற்ற முதலாவது மாணவர் என்னும் பெருமைகொண்ட இவர் லயத்துறை மாணவர்களிற்கு அறிவு புகட்டத் "தக்கதோர்" ஆசிரியராய் இன்றுவரை பணிபுரிந்து வருகின்றார்.

அமரர்களான கணபதியார் பண்டாரம் – நாகமுத்து தம்பதியரின் மகனாக 18.07.1934 அன்று யாழ்.மாவட்டத்தின் வடபால் அமைந்துள்ள மயிலிட்டி என்னும் ஊரில் கலைக் குடும்பத்தில் இவர் பிறந்தார். இவரது தந்தையார் இசைநாடகக் கலையை உயிராக நேசித்த ஒருவர் என்பதால் இவரது குடும்பத்தவர் அனைவரும் கலைத்துறை ஈடுபாடு கொண்டவர்களாகவே வளர்க்கப்பட்டனர். இவர் தனது பாடசாலைக் காலத்திலே, பண்புள்ள மாணவராகவும் கல்வியிலும் கலையிலும் தெய்வபக்தியோடு ஈடுபட்டு பல கலைவிழாக்களில் சாதனைபடைத்த கலைஞனாகவும் சிறப்போடு வளர்ந்து வந்தார். சிறு வயதில் வட்டுக்கோட்டை தம்பிராசா என்பவரிடம் மிருதங்கக் கலையைக் கற்கத் தொடங்கி அதன்பின்னர் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மிருதங்கக் கலைக்கு புத்துயிர் ஊட்டிக்கொண்டிருந்த தமிழகத்தின் மிருதங்க மேதையான சிதம்பரம் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களிடம் எட்டு ஆண்டுகள் வரன்முறையாக மிருதங்கக் கலையை கற்றுக்கொண்டார்.

1964இல் அரங்கேற்றம் கண்ட இவர் ஈழத்தின் திறன் கொண்ட இசையாளர்கள், நடனவியலாளர்கள் அனைவரது ஆற்றுகை களிலும் துணைக்கருவியான மிருதங்கத்தை பக்குவமாக வாசித்துச் சிறந்த பக்கவாத்தியக் கலைஞர் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார். சிறந்த கலைஞராக புகழ் கொண்டிருந்த போதும் மேலும் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தால் 1971 இல் கலாவித்தகர் என்னும் பட்டத்திற்கான பரீட்சைகளில் சிறப்புறச் சித்தியெய்தியும் 1974 இல் மருதனார்மடம் இராமநாதன் அக்கடமியில் (யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைக் கழகம்) நான்காண்டு கற்கை நெறியான சங்கீதரத்தினம் என்னும் பட்டத்திற்கான தேர்வுகளிலும் நற்பெறுபேறுகள் பெற்று முழுமைபெற்ற மிருதங்கக் கலைஞராகத் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

இதன்பின் 1976 இல் இருந்து 2008 வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் விரிவுரை யாளராகவும் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றி பரீட்சகராகவும் செவ்வனே பணியாற்றியவர். இன்று வரை வடஇலங்கைச் சங்கீத சபையின் மிருதங்கத் துறையில் அனுபவம் வாய்ந்த பரீட்சகராக அழைக்கப்பட்டு வருகின்றார். இவ்வாறு அரச பணிகள் நிறைவாகக் கிடைத்த போதும் இக்கலையை எமது தேசமெங்கும் பரப்ப வேண்டும் என்னும் எண்ணம் கொண்டு யாழ்.மாவட்டத்தின் சகல இடங்களிற்கும் சென்று பல விதமான கலாமன்றங்களில் தனது ஆசிரியத்திறனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமணம் பரப்பி வந்தவர். இப்போதும் சில இடங்களில் மிருதங்க வகுப்புக்களை நடாத்தி வருவதுடன் யாழ்.பலகலைக்கழக நடனத்துறையில் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். இது சின்னராசா அவர்களிற்கு மிகவும் பொருந்தும். இவரிற்குச் சிறந்த குரு அமைந்தது போல ஏராளமான மாணவர்களிற்குச் சிறந்த குருவாக இவரும் திகழ்ந்து லயஞானமூட்டி வருகின்றார். இதன் பயனாக இவரது மாணவர்கள் பலர் ஆண்டுதோறும் அரங்கேற்றம் கண்டு வருகின்றனர். முப்பதிற்கும் மேலான மாணவர்கள் இதுவரை இவரிடம் கற்று அரங்கேறியுள்ளனர். அத்துடன் நூற்றுக் கணக்கான மிருதங்கக் கலாவித்தகர்களையும் இதுவரையில் உருவாக்கியுள்ளார். மாணவர்களின் திறன்களை அறிந்து அதற்கேற்ப கற்பிக்கும் ஆசிரியர் என்பதாலேயே இவரால் இத்தகு சாதனைகளை நிலைநாட்ட முடிந திருக்கிறது.

இவர் சிறந்த ஆற்றுகையாளனாக, நல்லாசானாக மட்டுமல்லாமல் புதியன புனையும் வல்லமை கொண்டவராகவும் இருப்பதே இவரது தனித்துவப் பண்பாகும். தனது தமிழ்மொழி அறிவின் பயனால் ஏராளமான கீர்த்தனைகளை இயற்றி "விநாயகர் மகத்துவம்" என்னும் பெயரில் நூலாகவும் ஒலிப்பதிவாகவும் வெளியிட்டுள்ளார். அத்துடன் ஒவ்வொரு அரங்கேற்றத்திலும் மிக நுட்பமான கணக்கு முறைமைகளை பாடகருக்கும் ஏனைய கருவியாளர்களுக்கும் புதிது புதிதாக அறிமுகம் செய்து கலைஞர்கள் அனைவரிற்கும் லயஞானத்தை ஏற்படுத்தவல்ல "கணக்கு வழக்கு" துறையில் மிகுந்த அனுபவம் கொண்டவராகவும் விளங்கி வருகின்றார்.

இவரது ஆக்கத்திறனிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இவரால் 27.05.2007 அன்று இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் வெளியிடப்பட்ட "பல்லவி அமுதம்" என்னும் படைப்பைக் கூறமுடியும். இப்படைப்பானது நூலுடன் இணைந்த இறுவட்டாக வெளியிடப்பட்டது. ஒரு இசையாளன் தனது முழுத் திறனையும் அவையோர் முன்னிலையில் எடுத்துக்காட்டுவதற்காகத் தனது ஆற்றுகைப் பகுதியில் தெரிந்து கொள்ளும் இசைப்பகுதியே இராகம் தானம் பல்லவியாகும். நிறைவான இசைஞானம் இல்லாத ஒருவரால் இதனை மேடையில் ஆற்றுப்படுத்த முடியாது. எமது சங்கீதத்தில் கற்பனைப்பகுதிகளை மிகவும் விரிவாகக் காட்ட வல்ல பகுதியாகவும் இராகம் தானம் பல்லவியே காணப்படுகின்றது. இதனைப் பாடுவது ஒருவரது இசைஞானத்தை வெளிப்படுத்தும் என்பது போல் இதனைப் புதிதாக இயற்றுதல் என்பது ஒருவரது அதி உச்ச இசைஞானத்தின் வெளிப்பாடு என்றே கூறலாம்.

ஐம்பத்தைந்து (55) விதமான பல்லவிகள் "பல்லவி அமுதம்" என்னும் வெளியீட்டில் இடம்பெற்றுள்ளன. இருபத்தைந்திற்கும் அதிகமான தாளங்களும் அறுபதிற்கும் அதிகமான இராகங்களும் பயன்படுத்தப் பட்டிருக்கும் இப்படைப்பில் இராகமாலிகைப் பல்லவிகளும் தாள நடை வேறுபாடுகள் கொண்ட பல்லவிகளும் இடம்பெற்றுள்ளன. இவ்வெளியீடானது ஈழத்தின் இசை வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது என்பது இசையாளர்கள், மாணவர்கள் அனைவரும் அறிந்த உண்மையாகும். அத்துடன் இப்படைப்பானது தமிழகத்தின் இசையாளர்கள் பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

எப்போதும் லயம் பற்றிய சிந்தனையிலும் இசைபற்றிய தேடலிலும் தனது நேரத்தைக் கழித்து வரும் இவர் தன்னிடம் வருகின்ற பழைய, புதிய மாணவர்களிடம் புதிய ஜதிகளை அல்லது லயக்கோர்வைகளைக் கூறி அவர்களை வியப்பில் ஆழ்த்துவதுடன் மேலும் சிந்திக்கத் தூண்டும் வகையிலான கணக்கு வழக்குப் பற்றிய புதிர்களையும் அள்ளி வீசும் தன்மை கொண்டவர். இவ்வாறு மாணவர்களாலும் ஏனைய கலைஞர்களாலும் விரும்பப்படும் மிருதங்க முதுகலைஞராக எம்முன்னே வாழ்ந்து வரும் சின்னராசா அவர்கள் பல பட்டங்களையும் அரச விருதுகளையும் பெற்றுக்கொண்ட கலைஞராக இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பெருமை இல்லாத பக்குவமான நற்கலைஞ னாக வாழ்ந்து வருகின்றார்.

ஒரு மிருதங்கக் கலைஞன் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை இவர் இவ்வாறு கூறுகின்றார். "பாட்டிற்கு மிருதங்கம் வாசிக்கும் ஒருவர் பாடலை நன்கு கேட்டு அப்பாடல் தருகின்ற உணர்வைத் தானும் உணர்ந்து, சாகித்தியத்தின் தன்மைகளையும் விளங்கி, பாடலின் சுவை கெடாமல் பக்குவமாக வாசிக்க வேண்டுமே தவிர "தன்பாட்டிற்கு" வாசிக்கக் கூடாது. ஏனெனில் மிருதங்கமானது பக்க வாத்தியமே தவிர பிரதான வாத்தியம் அல்ல. அதேபோல நடனத்திற்கு வாசிக்கும் போதும் மிருதங்கத்தை "அடிக்காமல்" பக்குவமாக வாசித்தால் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் இதமாகவும் சுகமாகவும் இருக்கும்." என்கிறார்.

உலகில் உள்ள லயக்கருவிகளுள் மிருதங்கமே செவிக்கினிய நாதம் தருகின்ற கருவியாகவும் அதிநுட்பம் வாய்ந்த ஜதிச் சொற்கட்டுக்கள் வாசிக்கப்படுகின்ற கருவி யாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான தெய்வீகம் வாய்ந்த கருவியின் கலைஞனாகவும் ஆசிரியனாகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் இவர் மத்தளக்கலைச்சுடர், லயஞானசுரபி, லயஞானபானு, கலைஞானகேசரி, கலைச்சுடர், லயஞானகலாபமணி போன்ற பட்டங்களால் மதிப்பளிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பலர் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இக்கலையை மென்மேலும் வளர்த்து வருகின்றனர். அத்துடன் சிதம்பரம் ஏ.எஸ். இராமநாதன் அவர்களால் ஈழத்தில் எழுச்சி கொண்ட மிருதங்கக் கலைமரபினை இன்று வரை பாதுகாத்துப் பேணி வருவோருள் முதன்மையான ஒருவராகவும் இவர் திகழ்கிறார்.

இவ்வாறு பல அரும்பணிகளை ஆற்றிய முதுபெருங் கலைஞர் இணுவில் இளந்தொண்டர் சபையில் தமது மிருதங்கக் கலை அனுபவத்தைக் கடந்த முப்பது வருடங்களாகத் தொடர்ந்து பரப்பி வருகிறார்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையில் வருடா வருடம் எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களை மிருதங்கக்கலையை ஆவலுடன் கற்க உதவினார். இவரின் திறமையால் உருவான பலர் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் மிருதங்க இசையைப் பரப்பி வருகின்றனர். இவரிடம் மிகச் சிறு வயதில் கற்க ஆரம்பித்த பரமேஸ்வரன் கௌரீசன் என்பவர் இவ்வூர் இளந்தொண்டர் சபையின் கலா மண்டபத்தில் மிருதங்க இசை அரங்கேற்றத்தை இன்று (29-01-2012) நிகழ்த்துகிறார். கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்கள் தமது முதுமையில் 13 வயதான பேரப்பிள்ளைக்குச் சமனான கௌரீசனுக்குப் போதித்த பலனை இன்று இதயபூர்வமான நல்விருந்தில் இறையருளை யும் தமது குருவான ஏ.எஸ்.இராமநாதனின் வழிகாட்டலில் நிறைவு செய்கிறார். இச்சிறப்பு என்றும் நிலைக்கட்டும். திருவருளும் குருவருளும் என்றும் சிறக்கட்டும்.

**வசாவிளான் தவமைந்தன்**
**யாழ்ப்பாணம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியறிதல்

உலகறிந்த பல சிறப்புக்களையும் அமைத்து சைவத்துடன் ஆய கலைகளையும் பேண வைத்துச் சிறப்பான "கலைஞானசுரபி" என்னும் அரிய ஆக்கத்தை மலர்விக்க எம்மை உணர்த்திய நொச்சியம்பதி வாழ் கந்தப்பெருமானுக்கு முதற்கண் நன்றிகள்.


இறையருளை நாடி நறுமலராக்க சிந்தனையுடன் தம்மை நாடியபோது எமது குறிப்பறிந்து இன்முகம் காட்டி தூய சிந்தனையுடன் இணுவில் திருவூரின் மகிமையால் ஆலயச்சிறப்பு, கல்வி, கலை, கலாசாரப் பண்பு மற்றும் ஏனைய சிறப்புகளையும் முன் வைத்து எமது இளங்கலைஞரை ஆசீர்வதித்தும் வாழ்த்தியும் எம்மவரின் வாழ்வியல் மரபுகளையும் நிரலிட்டுச் சொல்லோவியங்களை எழுத்தோவியமாக்கி எமது மலரைப் பிரகாசிக்க வைத்த அருளாளர்கள், அறவோர்கள், நல்லாசிரியர்கள், மூதறிஞர்கள், கலைப் பணியாற்றும் வித்தகர்கள், பொதுப்பணி நலன்விரும்பிகள், கல்விமான்கள், சான்றோர்கள் யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

"இணையிலி" என்ற எமது திருவூரின் பண்டைய சிறப்புகளையும் கலை, கலாசாரம், பண்பாட்டு மரபுகளையும் இத்திருவூரின் இயல்புகளையும் யாவரும் அறியவும் எமது பின்சந்ததியினர் நன்குணர்ந்து பாரம்பரிய மரபுகளைத் தாமும் முறையாகப் பின்பற்றி எமது திருவூரின் சிறப்பைத் தொடர்ந்து பேணுவதன் பேரில் யாவற்றையும் ஆவணமாகப் பதியவேண்டுமென்ற நோக்கில் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினரின் நாற்பது வருட நீடிய காலப் பணியை ஆவணப்படுத்தி நூலுருவில் வெளியிட இறையருள் கைகூட்டியது. இறையருளும் குருவருளும் கைகொடுக்க எமது புதல்வனின் மிருதங்கக் கலை அரங்கேற்றத்தைச் சிறப்பிக்கும் நோக்கில் "கலைஞானசுரபி" என்னும் பெயரை மகனுக்கு அணிசேர்த்து அதனை நூலின் பெயராக அமைத்து எம்மையும் எமதூர்ப் பண்பையும் பெருமையையும் நூல் வடிவில் தொகுத்து வழங்கிய எமதூர் சமய சமூகப் பற்றாளருக்கும் எமது அன்பகலாத நன்றிகள்.

எமது மகனின் மிருதங்கக் கலை அரங்கேற்ற வைபவத்தில் சிறப்பு மலரொன்றை வெளியிடும் சிந்தனை மூன்று வாரங்களுக்கு முன்பே தோன்றியது. இக்குறுகிய காலத்தில் கணனியில் வடிவமைத்துச் சகல வேலைகளையும் தாமே பொறுப்பேற்று எம்மண்ணின் பெருமையை மேலும் யாவரும் மெச்சும் வண்ணம் எமது பண்டைய கலைப் பண்புகளை நவீன தொழில்நுட்பத்துடன் கலைநுட்பம் பிரகாசிக்க மலரை மலர்வித்த எமதூர் "சுடர்நிலவு கிரபிக்ஸ்" நிறுவனத்தாருக்கும் எமது நன்றிகள்.

எவரும் எதிர்பாராத வகையில் "கலைஞானசுரபி" என்னும் கலையமுதம் வெளிவர உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குலதெய்வமான காஞ்சிக்கந்தப் பெருமான் எல்லா நன்மைகளையும் நல்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

நன்றி
வணக்கம்



*என்றும் சைவக்கலை பண்பாட்டை நேசிக்கும்*
**பரமேஸ்வரன் வானதி குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் பெருமஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org